உ

கடவுள் துணை

# செந்தமிழ்

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.


தொகுதி-௫௧.] ஜய-௵—மார்கழி-௴ [பகுதி-௨.

Vol. 51. December-1954—January-1955. No. 2.


## உள்ளுறை


| | | |
|---|---|---|
| திருவள்ளுவர் கால வாழ்க்கை நிலை | வித்துவான் திரு. சு. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்கள், M. A. | 32—40 |
| இயற்கையைப் பயன் படுத்துதல் | திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் அவர்கள், B.A., B. L. | 41—46 |
| துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் | வித்துவான் திரு. ஆ. சிவலிங்கனார் அவர்கள் | 47—58 |
| நாலடியாராராய்ச்சி | திரு. பண்டித-சத்தியவாகீசுவர ஐயரவர்கள் | 59—64 |
| மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிருவாக சபைத் தீர்மானங்கள் | | |
| மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன்விழா தமிழர்களுக்கு வேண்டுகோள் | திரு. P. T. இராசன் அவர்கள் | |



பத்திராசிரியர்—திரு. நா. அப்பணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1954.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. N. Appan Iyengar at the Tamil Sangam Power Press, No. 54 Tamil Sangam Road, Madura.

உ

# ஒரு வேண்டுகோள்.

---

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்சேந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், சேந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

S. சிவஸ்வாமி,

மானேஜர்.

---

௨

கடவுள் துணை

# செந்தமிழ்

தொகுதி—௫௧.] ஜய-௵—மார்கழி-௴ [பகுதி—௨.

Vol. 51, December-1954—January-1955. No. 2.

## திருவள்ளுவர்கால வாழ்க்கை நிலை

வித்துவான், திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்கள், M.A. விரிவுரையாளர்,
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

திருவள்ளுவர் ஒரு பெருங் கவி; உலகம் போற்றும் உயரிய பண்பினர்; மக்களை நன்னெறிப்படுத்தும் மாண்புறு செயலினை யுடையவர். பல்வகைச் சாதி சமயங்களால் வரும் இன்னல்களை யுணர்ந்து, அவ்வின்னல்களைப் போக்குதற்குரிய சமரச சன்மார்க்கத்தை வலியுறுத்துபவர். இவர் நமக்களித்த நூல் திருக்குறள். திருக்குறள் ஓர் அறநூல், அரசியல் நூல், காம நூல், ஞான நூல், நீதி நூல், சுருங்கக் கூறின் வாழ்க்கைக்கு ஓர் வழிகாட்டி. நுட்பமும் திட்பமும் அமைய இவர் நுவலுந் திறன் வியக்கத் தக்கது. இந்நூல் துணைகொண்டு அக்கால மக்கள் வாழ்க்கையினை ஆய்வதற்கு, இவர் காலத்தும் இவர்க்கு முந்தியும் வாழ்ந்த புலவர்கள் பாக்கள் இன்றியமையாத கருவிகளாம்.

### நாடு

நந்தமிழ்நாடு நாடாவளத்தது, தக்காரையும் தாழ்விலாச் செல்வரையும் தன்னகத்தே யுடையது; பசியும் பிணியும் சேரா தியல்வது. இந்நிலையில் இருந்தது நந்தமிழ் நாடு என்பதனைப் பிற நாட்டார் கூறு

வனவற்றி லிருந்து உணரலாம். எனினும், பல்வகைப்பட்ட பொருளாதாரச் சிக்கல்களினால் நாட்டுவளம் மாறுபடுவதுண்டு. அதன் காரணமாக வறியவர் தோன்றுவர் என்பதனை நல்குரவு பற்றி இவர் கூறுவதால் உணரலாம். வறுமை மிகுவதனால் இரப்போர் கூட்டம் எழுகின்றது. இரப்பாரைப் புரப்பார் உண்மையினால் வருந்தாது வாழ்வதற்கு இரப்பதே ஏற்றது என நினைத்து, இரத்தற்றொழிலை மேற்கொண்டவர்களும் உண்டு. "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுகவுலகியற்றியான்" என்னும் குறள் இக் கருத்தினை வலியுறுத்தும். பொருளாதாரச் சீர்கேட்டினால் நாட்டில் பல கலகங்களும் நிகழும். அங்ஙனம் தோன்றும் பசி, பிணி முதலியன நீங்க அரசனது காவல் (ஏமம்) இன்றியமையாத தன்றோ!

ஆதலின், அரசியலுக்குப் பயன்படக்கூடிய வகையில் நாடு சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இடைக்காலத்தே வழங்கியது போல வளநாடு, கோட்டம், கூற்றம் என அப்பிரிவுகள் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். மிழலைக் கூற்றம் முத்தூர்க் கூற்றம் எனும் வழக்கு அதற்கு ஓர் எடுத்துக் காட்டாம். நாட்டில் இருந்த நகரங்கள் பல்வளங்களிலும் சிறந்து விளங்கின. மாடம், சித்திரமாடம், வேண் மாடம் என்னும் சொற்கள் அக் காலத்து நகரத்திருந்த மனையமைப்பினை நன்கு விளக்கும். நெற்கதிர் வேய்ந்தவீடு, புல்லால் வேய்ந்த வீடுகள் குறிக்கப்படுவதனால் ஊர்ப்பகுதிகளின் நிலை விளங்கும். சதுக்கம், மறுகு முதலிய சொற்கள் வீதியமைப்பினை விளக்கும். கோட்டம்பலம் என்னும் சொல் மதிலால் சூழப்பட்ட கோயில்கள் இருந்தன என்பதை விளக்கும். கோயில்கள் மக்கள் எல்லோர்க்கும் உரிய பொது இடமாகவே விளங்கின என்பது கோயிலைப் பொதியில், அம்பலம் என்பதால் விளங்கும். கடவுளுக்கு ஓர் வடிவம் அமைத்து வணக்கம் செலுத்தினர் என்பது, கலிகெழு கடவுள் கந்தம் கைவிடப் பலகண் மாறிய பாழ்படு பொதியில் (புறம் 52) என்பதனால் விளங்கும். கந்தம் (கந்து) இறைவனைக் குறிக்கும் வடிவம். 'பொதியில்' என்னும்

சொல், கோயில், பொது மன்றம் எனப் பொருள்படுவதால் மன்றங்கள் கோயிலோடு இணைந்து அமைந்திருந்தன என்பதும் போதரும். கடவுளுக்கு உருவம் அமைத்து வணங்குவர் என்பதனைத் திருக்குறள், கடவுள் வாழ்த்தில் திருவடிப் பெருமை கூறுவதனால் வலியுறுத்துவது காண்க. ஈண்டு "மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு இளம்பூரணர் கூறும் உரை நோக்கத்தக்கது.

## மன்பதை

மக்கள் அந்தணர், அரசர், வணிகர், அளவர், உமணர், இடையர், இயவர், எயினர், கம்மியர், கிளைஞர், குயவர், குறும்பர், கொல்லர், தச்சர், பூண்கொல்லர், பரதவர், பறையர், பாணர், புலையர், வலைஞர், வண்ணார், வேட்டுவர் முதலிய பல பிரிவினராக வாழ்ந்து வந்தனர். இச்சொற்கள் எல்லாம் குலம் (சாதி) குறிக்கவந்தனவல்ல, தொழில் குறிப்பன என்பர் பலர். வண்ணார், புலையர் ஆகியவர்களை இழிபிறப்பினர் எனப் புறநானூற்று 170, 311-ம் செய்யுள்கள் குறிக்கின்றன. 'கடைசியர்' என்னும் சொல்லின் பொருளை ஆயின் மக்கள் பிறப்பால் (சாதியால்) வேறுபடுத்தப்பட்ட நிலை அக்காலத்தும் உண்டு என்பது பெறப்படும். "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்னும் குறளும் அக்காலத்தில் சாதி வேறுபாட்டினால் வரும் தீமைகளை யகற்ற எழுந்ததாகும்.

அந்தணர் செம்பூமுருக்கின் நன்னார்களைந்து தண்டொடு பிடித்த தாழ்கமண்டலத்தர்; நான்மறை நவில்பவர்; படிம உண்டியர்; கேள்வி முற்றியவர்; அறமறக்கண்ட நெறிமாணவைபத்து முறை நன்கறியுநர் (சடங்கவிகள்). இவர்களுள் இரவலர்கள் செந்நெலமலை வெண்மை வெள்ளிழுதொடு பிச்சைகொள்வர். இவர்கள் ஆசில் தெருவில் வாழ்வர். இவர்களது இற்கடையில் நாயிருக்காது. இவர்கள் ஆனியல்பினர் (அந்தண்மையர்); தருப்பை ஏந்திப் புரோகிதம் செய்து வந்தனர் என்பது "அறம்புரிகொள்கை நான்மறை முதல்வர் திறம்புரி பசும்புல்

கிடப்பி (புறம் 93) என்பதனாற் பெறப்படும். ஆவும் ஆனியல்பார்ப்பன மாக்களும்" (புறம் 9), 'பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்' (புறம் 34), "நின்னாடு அழல்புறந்தரூஉம் அந்தணாது வே" (புறம் 122), இறைஞ் சுகபெரும நின்சென்னி சிறந்த நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே" (புறம் 6) என்ற பகுதிகளால் அக்காலத்து மன்னரும் மக்களும் இவர் பால் கொண்டிருந்த மதிப்பு நன்கு புலனாம். கேள்வி முற்றிய வேள்வி யந்தணர்க்கு அருங்கலம் நீரொடு சிதறினர் (புறம் 361). வேதம் ஓதி ஓதுவித்துவாழும் நெறியேயன்றிப் பிறநெறிகளையும் அந்தணர் வாழ்க் கையில் மேற்கொண்டனர் ஆதல் வேண்டும். அவர்கள் அரசியலினும் வல்லவர்; தூதுசொல்லும் திறனுடையவர்; போர்ப்பயிற்சியுடையவர் என்பது தொல்காப்பியத்தால் புலனாம். அந்தணர் என்போர் ஆனியல் பினர் எனக்கூறிய வள்ளுவனார், 'மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்' எனக்கூறுவதனால், வேத நெறியினின்று மாறியும் வாழ்ந்தனர் என்பது போதரும். அகப் பொருள் இலக்கணத்துள் பார்ப்பனப் பாங்கனைக் குறிப்பிடுவதும் நினைவிற்குரியது. வள்ளுவர் குறிக்கும் 'அந்தணர்' என்னும் சொல், பொதுவாக அறவோரைக் குறிக்கும் எனினும் அச்சொல் பார்ப்பன ரையும் குறிக்கும், குறித்தது என்பது மேற்காட்டிய மேற்கோள்களி னால் நன்கு புலனாம்.

ஏனைய இனத்தவர்களைப்பற்றியும் சங்ககால இலக்கியங்கள் குறிக் கின்றன எனினும், அந்தணரின் வழக்கங்களைக் குறிப்பதுபோன்று பிறகுலத்தவரின் வழக்கங்களைக் குறிக்கவில்லை. அவர்களது அரசு, வாணிகம், உழவு முதலிய தொழில்களை மாத்திரமே குறிக்கின்றன. ஆதலின், அவர்களது குல (ஜாதி) வழக்கங்களை நன்கு அறிந்துகொள் வதற்கில்லை. அரசரும் வணிகரும் போர்ப்பயிற்சியும் உடையவர்கள்; தூதாகச்செல்லும் தகுதியும் உடையவர்கள். "மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப" என்பதனால் வணிகரும் வேளாளரும் நாடுபுரக்கும் செயலையும் மேற்கொண்டனர் என்பது பெறப்படும். "அடியோர்

பாங்கினும் வினைவலர் பாங்கினும் கடிவரை இலபுறத் தென்மனூர் புலவர்'' என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால், தொழில் வல்லோரும் பொருளுடையோரால் அடிமைகள் போலக் கருதப்பட்டனர் என்பதும், அவர்கள் ஏனையோர்போல இன்பவாழ்வு வாழ்தற்குரிய செல்வவளம் இல்லாதவராக இருந்தனர் என்பதும் பெறப்படும்.

இத்தகைய வேறுபாடுகள் மலிந்ததனுல், மக்கள் அமைதியான வாழ்வுபெறமுடியாதநிலை ஏற்படும் என்பதை இன்றைய நிலையிலிருந்து நாம் நன்குணர்வோம். எனவே அமைதியற்ற உலகில் அமைதியை நிலைநாட்டுதற்கென ஆன்றோர்கள் பலர் அவ்வப்பொழுது தோன்றி உய ரிய கொள்கைகளை அறிவுறுத்தினர். அக் கொள்கைகளுள் சிறந்தது, "இன்னுசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு'' என்பதாம். அன்புநெறி (அருள் நெறி) பின்பற்றப்பட வேண் டும் என வற்புறுத்துவதும் இவ்வேறுபாடுகளை அகற்றவேயாம். இன்னு செய்யாமையே (அஹிம்சையே) மக்கள் எல்லோரும் ஓரினத்தவர் என் னும் உணர்ச்சியை எழுப்பவல்லது. நமது சமயகுரவர்கள் எல்லோ ரும் வற்புறுத்திக் கூறுவதும் இதுவே. "ஒன்ருக நல்லது கொல் லாமை மற்றதன் பின்சாரப் பொய்யாமை நன்று'' என வாய்மையை இரண்டாவதாக்கி, கொல்லாமையை உயர்த்துவதன் நோக்கம் உன்னு தற் குரியது. 'வாய்மை' என்னும் சொற்கு உரியதொரு பொருள், "தன்னெஞ் சறிவது பொய்யற்க, பொய்த்தபின் தன்னெஞ்சேதன்னைச் சுடும்'' என்ற குறளால் அறிந்ததை அறிந்தவாறே சொல்வது தான் என்பது பெறப்படும். "வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன் றும் தீமை யிலாத சொலல்'' என்பது, 'வாய்மை' என்ற சொற்கு நேர்பொருள் குறிப்பதன்று, வாய்மை நன்மை புரிவதாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகும். "உறுப்பொத்தல், மக்கள் ஒப்பன்றால் வெறுத்தக்க பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு'' "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்புபாராட்டுமுலகு என்னும் குறள் கள் ஒவ்வொருவருக்கும் பண்புவேண்டும் என்பதையும், அப்

பண்பு நீதியொடு அறம் கலந்ததாக இருக்கவேண்டும் என்பதை யும் அறிவுறுத்துகின்றன. 'அறனும் வேண்டும்' என்பதனுல் மேற் கூறப்பட்ட இன்னு செய்யாமை ஈண்டு வற்புறுத்தப்படுவது காண்க. "நண்பாற்று ராகி நயனில செய்வார்க்கும், பண்பாற்று ராதல் கடை" என்னும் குறள் பகைவரிடத்தும் அறநெறியோடு ஒழுக வேண்டும் என மீண்டும் அதனையே வலியுறுத்துகிறது. இன்னு செய்தல் இகழ்ச்சி யான் வருதலின், அவ் விகழ்ச்சியைக் கைவிடவேண்டும் என, "நகை யுள்ளும் இன்னு திகழ்ச்சி, பகையுள்ளும் பண்புள பாடறிவார் மாட்டு" என்னும் குறள் அறிவுறுத்துகின்றது. இக் கருத்தையே கணியன் பூங்குன்றனுர், "மாட்சியிற் பெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" என வற்புத்றுகின்ருர், பல்வகைகளால் வேறுபாட்டுணர்ச்சியுடைய மக்கள் அதனுல் வரும் அல்லல் நீத்து, ஓரினத்தவர் என்ற உணர்ச்சியோடு இன்ப வாழ்வு வாழவேண்டும் என் பதுதான் வள்ளுவர் உள்ளக் கருத்தாம். ஆதலின், அக்காலத்தில் சாதிமத வேறுபாடுகளால் மனம் வேறுபடாது ஒற்றுமையுடன் வாழ முயன்றனர், வாழ்ந்தனர் என்பதும் விளங்கும். ஈண்டு வள்ளுவனுர் ஜாதி வேண்டாம் மதம் வேண்டாம் எனச்சொல்லாது, ஒற்றுமையுடன் வாழ்க என்று அறிவுறுத்துவது சிந்தித்து உணர்ந்து பின்பற்றுதற் குரியது. அன்பும் குடிப்பிறப்புமே பண்பு என வள்ளுவர் உரைப்ப தனை ஓர்ந்துணரின் பண்பு பிறப்பின் உரிமை, நம்மால் விரும்பி எய் தப்படுவதன்று என்பது புலனும். பிறப்பொழுக்கம் குன்றக்கெடும் என்பதையும் சிந்திக்க.

இன்னுசெய்யாமையாகிய நெறி, இன்னுமை யுள்ளவிடத்துப் பயன்படாது போகும் என்பது எல்லோரும் அறிந்த தொன்று. ஏன்? மக்களது மனநிலை அத்தகையது. எல்லோரும் ஒருங்கமைந்து வாழவேண்டும் என்று கூறுகின்ற வள்ளுவர், 'சொன்னுலும் கேளா தார்' சிலரைக் குறிக்கின்ருர். இக் கருத்து, 'சிற்றினம் சேராமை' என்னும் அதிகாரத்துள் வற்புறுத்தப் படுகின்றது. அவர்களைத்

திருத்த முடியாதோ! எனின், 'ஒரு சிலரைத் திருத்தலாம், ஒரு சில ரைத் திருத்தவே முடியாது' எனக் குறிக்கின்றார். கல்வி கேள்வி யறி வில்லாத கயவர் திருந்தார் எனினும், அவர்களும் பிறர்க்குப் பயன் படும்படி செய்யலாம் என்பதை, "கரும்பு போல் கொல்லப் பயன்படும் கீழ்" என உணர்த்துகின்ற வள்ளுவனார், கல்லாத மேற்கொண்டொழு கும் கசடராகிய புல்லறிவாளர்கள் ஏவவும் செய்யாது தாமும் தேராது, தாம் உணர்ந்தனவே சரியானதெனக் கொண்டது விடாப் பண்பினராய், ஒரு சிறிது தாம் கற்றது கொண்டு ஒண்மை யுடையம் எனச் செருக் குக் கொண்டு, பெரியோர்கள் உண்டென்பதை இல்லை எனக் கூறித் திரிகின்றவர்கள் (நாத்திகர்கள்) அலகையாகக் கருதப்படுபவர் எனக் கூறுகின்றார். ஒண்மையுடையம் எனச் செருக்கித் திரிகின்ற அவர் கள் பெரியோர்கள் கூறும் அறிவுரை கேட்டுத் திருந்தார் என்பது நன்கு விளங்கும். இத்தகையவர்களிடத்தும் அன்பு காட்டுதல் வேண்டும், இன்னா செய்யாமை வேண்டும் என்பதையே வள்ளுவனார் வற்புறுத்து கின்றார். இதனைப் பிற்காலத்தவராகிய அருட்பிரகாச வள்ளலாரும்,

"உயிர்க்கொலையும் புலைப்புசிப்பும் உடையவர்கள் எல்லாம்
உறவினத்தா ரல்லரவர் புறவினத்தா ரவர்க்குப்
பயிர்ப்புறுமோர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக
பரிந்துமற்றைப் பண்புரையேல் நண்புதவேல் இங்கே
நயப்புறு சன்மார்க்கம் அவர் அடையளவு மிதுதான்
நம்மாணை யென்றெனக்கு நவின்றஅரு ளிறையே
மயர்ப்புறுமெய்த் தவர்போற்றும் பொதுவில்நடம் புரியும்
மாநடத்தென் னரசேயென் மாலையணிந் தருளே"

"கொடியவரே கொலைபுரிந்து புலைநுகர்வார் எனினும்
குறித்திடுமோ ராபத்தில் வருந்துகின்ற போது
படியிலதைப் பார்த்துகவேல் அவர்வருத்தம் துன்பம்
பயம்தீர்த்து விடுகஎனப் பகர்ந்துரைத்த குருவே"

எனக்கூறி வற்புறுத்துகின்றார். அவர் இந்நெறியினைச் சமரசசன்மார்க் கம் எனக்கூறுகின்றார். இந்நெறியினைக் கடைப்பிடிப்போர் காணமும்

மானமும் சால்பும் பண்பும் உடையவராக விளங்குவர், விளங்கினா என்பதைக் குடிமை முதல் கயமை ஈறாக உள்ள அதிகாரங்களால் திருக்குறள் வலியுறுத்துகிறது.

இந் நெறியினைக் கடைப்பிடிப்போர் கல்வியறிவோடு கேள்வியறிவும் உடையவர்களாதல் வேண்டும். கற்றூர்க்குத்தான் இந்நெறியினைப் பின்பற்றல் இயலும். இதனாலன்றோ இரக்க உணர்ச்சியில்லாத விலங்கினைக் கல்லாதார்க்கு உவமையாகக் காட்டினார் திருவள்ளுவர். கல்வியறிவோடு கேள்வியறிவும் (பெரியோர்களது அநுபவ மொழிகளைக் கொள்ளல்) பெறல் வேண்டும். பெரியோர்களது அநுபவ மொழிகள் பொன்னேபோற் போற்றிக் கொள்ளப்பட வேண்டும். இதனைச் "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள் அவியினும் வாழினுமென்" என்னும் குறளால் வற்புறுத்துகின்றார். 'பெரியாரைத் துணைக்கோடல்,' 'பெரியாரைப் பிழையாமை' என்னும் இருவேறு அதிகாரங்களை அமைத்திருப்பதும் ஓர்ந்துணரத் தக்கது. எனவே பண்டைத் தமிழ் மக்கள் கல்விகேள்விகளில் சிறந்து அன்பு நெறியைப் பின்பற்றி இன்ப வாழ்வு வாழ்ந்தனர் என்பது நன்கு புலனும்.

(தொடரும்)

# இயற்கையைப் பயன்படுத்துதல்

## * 1. நீரின் ஏற்ற வற்றம்.

**திரு. பே. நா. அப்புஸ்வாமி ஐயர் அவர்கள், B.A., B.L., சென்னை.**

ஓரளவில் சக்தியும் அறிவைப் போன்றது. கல்வி கற்கும் ஒருவன் அறிவை மேன்மேலும் பெறப்பெற, அதை இன்னும் அதிகமாகவே நாடத் தொடங்குகிறான். அதைப்போலவே, சக்தி வாய்ந்த ஒருவனும் சக்தியை மேன்மேலும் அடைவதற்கான முயற்சிகளைச் செய்யக் காண்கிறோம். ஆனால், அறிவுக்கும் சக்திக்கும் ஒரு முக்கியமான அமிசத்தில் மிகப் பெரிய வேற்றுமை இருக்கிறது. கொடுத்தாலும், எடுத்தாலும் குறையாத இயல்புள்ளது அறிவு. சக்தியோ எடுக்க எடுக்கக் குறைந்துவரும் இயல்புள்ளது. ஆகையால், சக்தியைப் பெருக்குவதும், அதை இயற்றுவதற்கேற்ற புதுப்புது முறைகளை நாடுவதும் மக்கள் இனத்துக்கு அவசியமாக இருக்கிறது.

இயற்கைக்கு முற்றிலும் அடிமைப்பட்டு வாழ்ந்த நாம் அறிவின் துணையால் விடுதலை அடைந்து விட்டோம். நம் மீது கொடுங்கோல் ஆட்சி புரிந்து வந்த இயற்கையை நாம் வசப்படுத்தி, அதைப் பயன்படுத்தி வருகிறோம். இயற்கைச் சக்திகள் நமக்குக் குற்றேவல் புரிகின்றன. இயற்கையாக வீசும் காற்றிலிருந்தும், எரியும் நெருப்பிலிருந்தும் இயங்கும் நீரிலிருந்தும் நாம் சக்தியைப் பெறுகிறோம் என்பது பலரும் அறிந்த உண்மை. ஆனால், காற்று எப்போதும் ஒன்றுபோல வீசாது. அது சஞ்சல சுபாவம் உள்ளது; ஆகையால் பெரும்பாலும் அதை நம்ப முடியாது. அதைப் பயன்படுத்தும் முயற்சிகளை அதிகம் தேட வேண்டாம் என்று சிலர் காற்றைக் குறைகூறுகிறார்கள். நெருப்புக்கு ஆதாரமாக உள்ள விறகும், நிலக்கரியும் எண்ணெயும் இப்

---

* சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் 7-7-54ல் ஒலி பரப்பியது; அந்நிலையத்தார் அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.

போது ஏராளமாகக் கிடைப்பதால் நாம் அவற்றைத் தாராளமாக உபயோகிக்கிறோம். ஆனால் அவை வரவரக் குறைந்துகொண்டே வருகின்றன. ஆதலால் அவை கிடைக்காமல் போகும் காலம் ஒன்று வரும்; சந்தேகமில்லை. அந்தக் காலத்தை எதிர்பார்ப்பதும், அதற்கு ஏற்ற பரிகாரங்களை இப்போதே தேடத் தொடங்குவதும் நல்லது. ஆகையால் இன்னும் வேறு சக்தி ஊற்றுக்கள் என்ன என்ன இருக்கின்றன; அவற்றை எப்படி எப்படிப் பயன்படுத்தலாம்? என்று ஆராய்வது அவசியம் என்று சிலர் எச்சரிக்கை செய்கிறார்கள்.

நாம் மேலே குறிப்பிட்ட சக்தி-ஊற்றுக்களில் மூன்றாவது நீர் என்பது. ஆதிகாலம் முதலே ஓடும் நீரில் அடங்கிய சக்தியை மக்கள் கண்கூடாகக் கண்டார்கள். ஆறும் கடலும் பெரும் பாறைகளைப் புரட்டக் கண்டார்கள். அவைகளைத் தகர்த்துத் தூளாக்குவதையும் கரைகளை உடைத்து நாடுகளையும் நகரங்களையும் அழிப்பதையும் கண்டார்கள். பண்டைக் காலங்களில் நாகரிகம் ஓங்கிய எகிப்து நாட்டில் ஓடும் நீரைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். இப்போதும் அதைப் பற்பல நாடுகளில் பயன்படுத்தி வருகிறார்கள். ஓடும் நீரானது சக்கரத்தை மேலிருந்தோ, கீழிருந்தோ, சற்றே நெஞ்சுப் புறமாகவோ தாக்கிச் சுழலச் செய்கிறது. அந்தச் சுழற்சியால் எந்திரங்கள் வேலை செய்கின்றன. மற்றொரு வகையாகவும் நீர் பயன்படுகிறது. மின்சாரசக்தியை இயற்ற வழி தெரிந்துகொண்டபின் மலை உச்சிகளிலிருந்து குதிக்கும் அருவியின் நீரில் அடங்கிய சக்தியைக் கொண்டு, டர்பைன்கள் (Turbines) என்னும் சுழல்சக்கரங்களைச் சுழலச்செய்து மின்சாரசக்தியை இயற்றுகிறார்கள்; அதைப் பயன் படுத்துகிறார்கள். மின்சாரசக்தி நமக்கு ஒவ்வொரு துறையிலும் அடிமையாக இருந்து வேலைசெய்து வருகிறது.

ஆனால், பெரிய நீர்வீழ்ச்சிகள் ஒன்றும் இல்லாத நாடுகள் பல இருக்கின்றன. அவற்றில் இவ்வகையாகச் சக்தியைப் பெற முடியாது. மேலும் வேறு சில நாடுகளில் உள்ள நீர்வீழ்ச்சிகளை யெல்லாம் அநேகமாய்ப் பயன்படுத்தியாகிவிட்டது. இன்னும் அதிகமான

சக்தியை அவற்றிலிருந்து பெறுவதற்கு வழி இல்லை. ஆனால் எங்கும் சக்தி வேண்டியிருக்கிறது; வேண்டும் என்னும் ஆசையும் இருக்கிறது.

ஆகையால், சக்தியைப் பெறுவதற்கான வேறு வழிகள் எவையாவது உண்டா என்று பல அறிஞர்கள் தேடிவருகிறார்கள். அளவற்ற நீர் நிறைந்த பெருங் கடலிலே மூன்று வகையான இயக்கங்கள் காணப்படுகின்றன. ஒன்று அலை என்பது. இது காற்றினால் உண்டாவது. காற்றின் தன்மைக்கு ஏற்றபடி வேறுபடுவது. நம்பத்தகாதது. இதைப் பயன்படுத்துவதும் எளிதாகத் தோன்றவில்லை.

மற்றொன்று கடல் நடுவே நிகழும் அற்புதமான நீரோட்டம்; இவ் வகையைச் சார்ந்த ஒன்றை கல்ப்-நீரோட்டம் என்கிறோம். இது பெரும்பாலும் நடுக்கடலில் நிகழ்வது. நிலத்தில் வாழும் நம்மால் இதை நன்கு பயன்படுத்த இயலாது என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. பூமியில் பல பகுதிகளுக்கும் இடையே உள்ள வெப்ப நிலை வேறுபாடும், நீர் ஆவியாவதில் உள்ள வேறுபாடும், காற்றின் போக்கும் இதற்குக் காரணங்கள் என்று சொல்லப்படுகிறது. இவை யாவும் காலத்துக்குக் காலம் வேறுபடும் இயல்புள்ளவை அல்லவா?

கடலின் மூன்றும் வகை இயக்கம் ஏற்ற வற்றம் என்பது. கடற்கரையின் அருகிலுள்ள ஊர்களில் வாழ்பவர்களுக்கு இது தெரியும். கடலில் எழுந்து திரண்டு வரும் அலைகள், உருண்டோடிப் புரண்டு தரையில் மோதி, ஓவென்று இரைச்சலிட்டு, கரையில் ஏறிவந்து, இறங்கிப் போகின்றன. இவ் அலைகள் சிலவேளைகளில் கரையில் அதிகம் ஏறுவதையும், சில வேளைகளில் கரையிலிருந்து அதிகம் எட்டிப் போவதையும் அவர்கள் கவனித்திருப்பார்கள். கடலின் அலைகள் கரையில் அதிக தூரம் ஏறும்போது கடல் பொங்குகிறது என்று அவர்கள் கூறக் கேட்கலாம். இதற்குச் சந்திரனே காரணம் என்று அவர்கள் கருதியதால், 'சந்திரனைக் கண்ட கடல் பொங்குவது போல்' என்னும் உவமை பலராலும் வழங்கப்படுகிறது. இப்படிக்

கடல் பொங்குவதையே விஞ்ஞானிகள் கடலின் ஏற்றம் (Flow Tide) என்கிறார்கள். கடலின் அலைகள் கரையிலிருந்து அதிக தூரம் எட்டிப்போவதையே அவர்கள் கடலின் வற்றம் (Ebb Tide) என்கிறார்கள். இரண்டுமாகச் சேர்ந்து கடலின் ஏற்ற வற்றம் (Tides) எனப்படுகிறது.

கடலின் ஏற்ற வற்றங்கள் உண்டாவதற்குக் காரணம் பூமியின் மீதும், கடலின் மீதும் சூரியனும் சந்திரனும் செலுத்தி வரும் ஆகர்ஷண சக்தியின் கவர்ச்சியே யாகும். சூரியனைக் காட்டிலும் சந்திரன் மிகவும் சிறியது. ஆனால் அது சூரியனைவிட மிகவும் அருகில் இருக்கிறது. ஆகையால், சந்திரன் பூமியின்மீது செலுத்தும் ஆகர்ஷண சக்தி சூரியன் பூமியின்மீது செலுத்தும் ஆகர்ஷண சக்தியைப் போல் மும்மடங்காக இருக்கிறது.

இந்தக் கவர்ச்சியின் விளைவாக உண்டாகும் கடலின் ஏற்ற வற்றமும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கடற்கரை ஊரிலும், இருமுறை நடக்கிறது. அதாவது ஒவ்வொருநாளும் ஒவ்வோர் ஊரிலும் இரண்டு ஏற்றங்களும் இரண்டு வற்றங்களும் உண்டாகின்றன. இந்த ஏற்ற வற்றங்கள் ஒவ்வொரு நாளும் நேரத்திலாவது, அளவிலாவது ஒன்றுபோல நிகழ்வதில்லை, பௌர்ணமியன்றும், அமாவாசை யன்றும், கடலின் ஏற்றம் அதிகமாக இருக்கிறது.

அமாவாசையன்று சூரியனும் சந்திரனும் பூமியில் ஒரே பக்கத்திலிருந்து ஒரே பக்கமாகக் கடல்நீரைக் கவர்கின்றன. ஆகையால் கவர்ச்சியும், ஏற்றமும் அன்று அதிகமாக இருக்கின்றன. அது போலவே, பௌர்ணமியன்றும் சூரியன் பூமியில் ஒரு பக்கத்திலுள்ள கடல்நீரையும் சந்திரன் அதற்கு எதிர்ப்புறத்திலுள்ள கடல் நீரையும் கவர்கின்றன. ஆகையால், அப்போதும் கவர்ச்சியும் அதன் விளைவான ஏற்றமும் அதிகமாக இருக்கின்றன. இவ்விரண்டு நாட்களில் உண்டாகும் கடலின் ஏற்ற வற்றத்துக்கு உவா ஏற்றம் (Spring Tide) என்று பெயர்.

இடையேயுள்ள பௌர்ணமி கடந்தபின் நாளுக்கு நாள் ஏற்றம் வரவரக்குறைந்து, எட்டாம் நாளில் மிகவும் தாழ்ந்தநிலையை அடையும். ஏனென்றால் அன்று சந்திரன் ஒருபுறமாகவும் சூரியன் அதற்குக் குறுக்காகவும் கடல் நீரைக் கவர்கின்றன. இந்த நிலையை இடையுவா ஏற்றம் (Neap Tide) என்று சொல்லுகிறார்கள். பின்பு, மறுபடியும் வரவர உயர்ந்து, அமாவாசையன்று மிகவும் அதிகமாக இருக்கும். அமாவாசை தொடங்கிப் பௌர்ணமி வரையிலுள்ள நாட்களிலும் இப்படியே தாழ்ந்து உயரும்.

சென்னையின் கடற்கரையைப் போல் வளைவு நெளிவு இல்லாத இடங்களில் கடலின் ஏற்றவற்றங்களின் வித்தியாசம் அதிகம் இல்லை. புனல் வடிவமாக அமைந்ததாயும் கடலின் ஏற்றவற்ற நீர் ஏறி வந்து இறங்கக் கூடியதாயும் உள்ள இடங்களில் ஏற்றவற்றங்களின் வித்தியாசம் அதிகம் இருக்கும். உதாரணமாக, அமெரிக்காவின் உள்ள பண்டி விரிகுடாவில் (Bay of Fundy) இந்த வித்தியாசம் சுமார் எழுபது அடி. இங்கிலாந்திலுள்ள பிரிஸ்டல் கால்வாயில் (Bristol Channel) இந்த வித்தியாசம் உவா ஏற்றத்தின்போது சுமார் நாற்பத்தேழு அடி; இடையுவா ஏற்றத்தின் போது இருபத்திரண்டு அடி. இரண்டுக்கும் இடைக்காலத்தில் சுமார் முப்பத்துமூன்று அடி. இங்கே குறுகிய ஓர் இடத்தின் வழியாகத் தினந்தோறும் இரண்டாயிரத்து நானூறுகோடி காலன் கடல் நீர் ஏறி இறங்குகிறது. இதில் எவ்வளவு சக்தி வீணாகப் போகிறது?

நாளுக்கு நாள் இருமுறை திசை மாறுவதாயும், மாதம் இருமுறை கூடிக் குறைவதாயும் உள்ள ஏற்றவற்றத்தைப் பயன்படுத்தி நாள் தோறும் வேண்டிய சக்தியை ஒழுங்காகப் பெறுவது இயலாத காரியம் என்றே தோன்றும்.

ஆனால், இங்கிலாந்திலே உயர்ந்த நீர்வீழ்ச்சிகளை உடைய பெரிய ஆறுகள் இல்லை. ஆதலால் வசதிகள் வாய்ந்த பிரிஸ்டல் கால்வாயில் இவ் வகையான முயற்சியைத் தொடங்கலாம் என்று இங்கிலாந்து நாட்டு அறிவாளிகளுக்குத் தோன்றிற்று. அங்கு எட்டு

வருஷ காலம் இதைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடந்தன. கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. எத்தனையோ புள்ளி விவரங்கள் குறிக்கப் பட்டன. நீர்வீழ்ச்சியில் இருப்பது போல் ஏற்றவற்றத்தில் நீர் மட்ட உயர்வு அதிகம் இல்லை. ஆகையால் மின்சாரம் இயற்றும் டர்பைன்களை வேறு வகையாக அமைக்கவேண்டும் என்பதும் தெளிவாயிற்று. விலைகளையும் செலவுகளையும் கணக்குப் பார்க்கும்போது இது லாபகரமான முயற்சி என்றே தோன்றிற்று.

ஏற்றவற்றம் நாளுக்கு நாள் அளவிலும் நேரத்திலும் வித்தியாசப்படுவதால், அதிலிருந்து இயற்றப்படும் மின்சாரத்தை அவ்வப்போது உபயோகப்படுத்துவது இயலாது. மின்சாரம் அதிகம் வேண்டியபோது ஏற்றவற்றம் டர்பைன்களை வேண்டுமளவு சுழலச் செய்து அதை இயற்றித் தராது. ஆனால் இப்போது மின்சாரப் பின்னல் திட்டம் (Electricity Grid System) ஏற்படுத்தப்பட்டிருப்பதால், மற்ற இடங்களிலுள்ள மின்சாரம் இயற்றும் சாலைகளோடு இதையும் இணைத்துவிடலாம் அல்லவா? அந்தத் திட்டத்தை வகுத்துச் சில காலத்துக்கெல்லாம் உலக மகாயுத்தம் தொடங்கி விட்டது. ஆகையால் அந்த மின்சார முயற்சியைத் தொடங்கவில்லை இப்போது அதைத் தொடங்கிவிட்டார்கள். விரைவில் கடலில் ஏற்றவற்றத்திலிருந்து ஏராளமான மின்சார சக்தி உற்பத்தியாகும்.

அம் முயற்சி எதிர்பார்த்தபடி நல்ல பலனை அளிக்குமானால், உலகில் இன்னும் சில இடங்களில் அதைப்போன்ற முயற்சியைத் தொடங்க முடியும். நமது நாட்டில் அப்படிப்பட்ட பெரிய முயற்சிக்கு ஏற்ற இடங்கள் இல்லை ஹுக்ளி நதியில் (The Hugli) முகத்துவாரம் ஓரளவு பயன்படக்கூடிய இடம் என்று எண்ணுகிறார்கள். அதைப் பயன்படுத்தும் காலம் விரைவில் வந்துவிடும் என்று எதிர்பார்ப்போமாக.

# துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள்

வித்துவான், ஆ. சிவலிங்கனூர் அவர்கள், விரிவுரையாளர்,
தமிழ்க் கல்லூரி, மயிலம்.

(50-ம் தொகுதி 376-ம் பக்கத் தொடர்ச்சி)

அக்காலத்திலே அண்ணுமலை ரெட்டியார் என்பவர், சுவாமிகளைத் "தேவரீர் விவாகம் செய்துகொள்ளவேண்டும்" என்று பிரார்த்திக்கச் சுவாமிகள்,

செய்கொண்டா ருக்கமலச் செம்மலுட னேயரவப்
பாய்கொண்டா னும்பரவும் பட்டீச் சுரத்தானே
நோய்கொண்டா லுங்கொளலாம் நூறுவய தளவிருந்து
பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே

எனவும்,

நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த
பெரியோர்கள் நிமலன் தாளைக்
கிட்டையிலே தொடுத்தமுத்தி பெறுமளவும்
பெரியசுகங் கிடைக்குங் காம
வெட்டையிலே மதிமயக்கும் சிறுவருக்கு
மணம்பேசி விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்தநடுக் கட்டையிலே
கிடத்துமட்டும் கவலை தானே

எனவும் விடையளித்தருளினர். சுவாமிகள் கருத்துணர்ந்து பின்பு வேலையசுவாமிகளைப் பிரார்த்திக்க, அவர் சிவப்பிரகாசசுவாமிகளுடைய கட்டளை யெவ்வாறுமோ என்னும் கருத்தால் உடன்படல் மறுத்தல் என்னும் இரண்டும் இன்றி மௌனராய் இருந்தனர். பின்னர் யாத்திரையினின்றும் வந்த கருணைப்பிரகாசசுவாமிகளிடத்தில் தமது வேண்டுகோளை விண்ணப்பம் செய்தமாத்திரத்தில் அவர் அதற்கு உத்தரமாக,

காணி யென்பதை நாரியென் றுரைத்திடு நசையால்
வேணு வானது விளைந்துபொய் புகுந்தது வென்றூற்
காண லாவதோர் உருவமெய்ந் நாரியைக் கண்டாற்
பூணு வார்மயல் காளையர் என்பதும் புதிதோ

என்னும் கலித்துறையைப் பாடித் தமது கருத்தை உள்ளபடி தெரிவித்தார்.

சிவப்பிரகாசசுவாமிகள் தம் பின்னோராகிய இருவர் கருத்தையும் உணர்ந்து அவர்களுக்குத் தாம் துறவறம் பூண்டமையைத் தெரிவித்து மணம் புரிவித்து அத்தருணத்திலே யாவரும் பேருவகையுறும்படி விநோதமாக,

ஐயநின் சென்னிமிசை யுறைகின்ற மடமங்கை
யாரென்ன வுமைவினவவும்
அன்னதொரு மடமங்கை யன்றுவெண் டிரைகொழித்
தழகொழுகு தண்புனலெனத்
துய்யவொளி யானனம் கரியவிழி காதுவாய்
தோயத்தி லுண்டோவெனச்
சொல்லருங் கமலமலர் காவிமலர் கொடிவள்ளை
தூயசெங் குமுதமென்னப்
பொய்யென நினைந்துநற் கொங்கையுங் கூந்தலும்
புனலிடை யுண்டோவெனப்
புற்புதம் சைவலம தெனவே மறுத்துப்
புகன்றிடுதி நங்காயெனத்
தையலவ ளேனென்ன நாணொடு வணங்கியென்
றன்பிழை பொறுத்திடென்றே
சங்கர னுரைத்திடத் திருவுள மகிழ்ந்தசிவ
சங்கரி யுமைக்காக்கவே

எனவும்,

அரனவ னிடத்திலே யைங்கரன் வந்துதா
னையவென் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளினன் என்றே சிணுங்கிடவும்
அத்தன்வே லவனைநோக்கி
விரைவுடன் வினவவே யண்ணனென் சென்னியில்
விளங்குகண் எண்ணினன் என
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ யப்படி
விகடமேன் செய்தாயென
மருவுமென் கைக்கீள முழமளந் தானென்ன
மயிலவன் நகைத்துநிற்க
மலையரைய னுதவவரு முமையவளை நோக்கிநின்
மைந்தரைப் பாராய்எனக்

கருதரிய கடலாடை யுலகுபல வண்டங்
கருப்பமாப் பெற்றகன்னி
கணபதியை யருகழைத் தகமகிழ்வு கொண்டனள்
களிப்புடன் உமைக்காக்கவே

எனவும்,

அம்பிகை யரன்றன்னை நோக்கியுன் னூபரணம்
அரவமென் வுமையைநோக்கி
யரியரவ சயனத்தை யரவுருவ மானத்தை
யறிபாய்கொல் சிறிதுமென்ன
நம்பிமனை தொறுமிரந் துணுமாண்டி நீயென்ன
நான்முதன் அறிவேனென
நகையுறும் பொய்புகன் றீரெனப் பாரத
நடக்ததே கரியாமென
வெம்பியொரு வன்பிரம் பால்டித் தானென
விளங்கிழை யொருத்திதாம்பால்
வீசினது சொல்லென்ன வென்னுயிரம் பெண்கள
மிருகற்பை நீக்கினேயெனப்
பம்புகற் பினிலோ ரிரட்டிப்பு நீக்கினது
பதறுமல் நீகேளெனப்
பரமருடன் இவ்வாறு விளையாடு பச்சைப்
பசுங்கொடி யுமைக்காக்கவே

எனவும்,

அச்சுத னளிப்பனில முமதுகே யன்வித்தை
யருளுவன் பலபத்திர
னலமுதவு வன்சமன் பகடீவ னந்தமக்
கானதோ ரெருதுமுண்டே
முச்சிர வயிற்படை யினைக்கொழுவ தாக்குவோ
மொய்ம்புட னுழுத்திறுக்க
முந்திய வடக்கயிற் றுடன்மற்று மமதன்பர்
முன்போ யிரந்துகொள்வோம்
இச்சையுடை நமதினைய தனையனு கியகந்த
னினிமையொடு மாடுமேய்ப்பன்
இனியுழுது பயிரிடுதல் நன்றுநன் றிதைவிட்
டிரந்துண்ப தீனமெனவே

கச்சுமுலை மாதுமை யுரைத்திடும் புத்தியைக்
கைக்கொண் டுளத்திலிதுநற்
காரிய மெனக்கருதி மெத்தக் களித்திடுங்
கண்ணுதல் உமைக்காக்கவே

எனவும்,

கவுரிகம லாயர னிரந்தசோ றுணவெனக்
கமலைமண் கண்டேனெனக்
காளையொன் றேயாற் கெனமாடு மேய்த்ததைக்
கட்டிடைய னுரோவெனச்
சிவனொருவர் தூதென்ன வத்தூது சென்றகதை
செப்பிலொரு பாரதமெனச்
சேரோடு திருடின னரனெனக் கட்டுண்ட
செய்திகா மறிவோமென
வவையினட மாடின னரனென்ன வவ்வாடல்
அரவமறி யாதோவென
ஆலமதை யுண்டனன் அரனென்ன மண்ணுண்ட
வதனையறி யோமேவென
விவரமொடு மலைமகளும் மலர்மகளும் இவ்வாறு
விளையாடும் இவர்கள் துணையா
மேவிவரு புத்திரமித் திரகளத் திருடன்
மேன்மேலு மிகவாழியே

எனவும் சில செய்யுட்களால் ஆசீர்வதித்தருளினர்.

பின்பு தம்மிடத்தன்பு பூண்ட அண்ணாமலை ரெட்டியாரோடு சிதம்பரத்திற் கெழுந்தருளி, அங்கே யொரு திருமடங்கட்டுவித்து அதில் வீற்றிருந்து சுவாமிதரிசனம் செய்துகொண்டு, சிவப்பிரகாச விகாசம், தருக்க பரிபாஷை, சதமணி மாலை, நால்வர் நான்மணிமாலை என்னும் பிரபந்தங்களைச் செய்தருளி, அத்தலத்தை அருமையாக நீங்கி, பிறதலங்களையும் வணங்கி, திருக்காட்டுப்பள்ளியை யடைந்து சுவாமிதரிசனம் செய்துகொண்டு தங்கி யிருந்தனர். அங்கிருக்கும் போது கல்வியறிவிற் சிறந்த ஒரு பெண் வீதியினிடத்தே உப்பு விற்றலைக் கண்டு இரக்கமுற்றுத் திருநோக்க தீக்ஷை செய்து அவளது நல்லூழையும் பரிபக்குவத்தையும் உணர்ந்து அவளுடைய புலமையைப் பிறர்க்குப் புலப்படுத்தத் திருவுளங்கொண்டு,

நிறைய வுளதோ வெளிதோ கொளுவேம்
பிறையை முடிக்கணிந்த பெம்மான்—உறையும்
திருக்காட்டுப் பள்ளி திரிபாவாய் நீயித்
திருக்காட்டுப் பள்ளி யெமக்கு

என்னும் திருவெண்பாவைத் திருவாய் மலர்ந்தருளிய மாத்திரத்தே அப்பெண்;

தென்னுக்கு தில்லைச் சிவப்பிரகா சப்பெருமாள்
பொன்னுக்கு சேவடியைப் போற்றினேம்—அன்னேன்
திருக்கூட்ட மத்தனைக்கும் தெண்டனிட்டோம் தீராக்
கருக்கூட்டம் போக்கினேம் காண்

என்னும் வெண்பாவைப் பாடிக்கொண்டு, தரிசன வேதியின் எதிர்ப்பட்ட இரும்பு போல மனமுருகி மிக்க விரைவோடு விழுந்து நமஸ்கரித்து எழுந்து கூப்பிய கரத்தினளாய் நிற்க, அப் பெண்ணிற்கு உண்மை ஞானம் உண்டாகும்படிக் கிருபாநோக்கம் செய்தருளினர்.

அதன்பின் காஞ்சிபுரத்தைத்தரிசிக்கவிரும்பி அண்ணாமலைரெட்டியாரோடும் பிரயாணப்பட்டு வரும்போது வழியிலே சாந்தலிங்க சுவாமிகளைக் கண்டு கலந்து களிகூர்ந்தபின் அவரை நோக்கித் "தாங்கள் பேரூர் என்னும் திவ்ய தலத்தினின்றும் எதை யுத்தேசித்து எழுந்தருளியது" என்று வினவ அவர், "சிவஞான பாலய தேசிகரைத் தரிசித்தல் வேண்டும் என்னும் பெருங் காதலால் வந்தேன்" என்றுரைத் தருளினர். பின்னர் இருவரும் பேருவகை யுற்றுப் பொம்மய பாளயத்துக்குச்சமீபமாகிய புத்துப்பட்டு என்னும் நகரத்தையடைந்தவுடன் சாந்தலிங்க சுவாமிகள், சுவாமிகளை நோக்கி "நாமிருவரும் சிவஞான பாலய சுவாமிகளைத் தரிசிக்க வேண்டியிருப்பதால் அவர்கள் மீது சில தோத்திரங்கள் பாடுக" என்று பிரார்த்திக்க, சுவாமிகள் "நாம் நரஸ்துதி பண்ணுவதே யில்லை" என்று மறுத்துவிட்டு சாந்தலிங்க சுவாமிகளோடு அவ்வூரிலுள்ள ஐயனார்கோயிலின் புறம்பில் அன்றிரவு துயில்கொண்டார். அப்பொழுது முருகக் கடவுள் மயில்வாகனரூடராய் எழுந்தருளி ஒரு பாத்திரத்தில் விடு புஷ்பங்களை வைத்து "இவற்றை மாலையாகத் தொடுத்து நமக்கு அணியக் கடவாய்" என்று திருவாய் மலர்ந்து மறைந்ததாகக் கனவு கண்டு, சாந்தலிங்க சுவாமிகளுக்குத் தெரிவிக்க, அவர், "சிவஞான பாலய தேசிகர் முருகக் கடவுளிடத்து அதிபத்திமை பூண்ட உள்ளத்தோடு விளங்கியிருந்ததால் அதுபற்றியே அக் கடவுள் தங்க

னுக்குச் சொப்பனத்தில் அத்தேசிகர் மகிமையை யிவ்வாறாகப் புலப் படுத்தினர்" என்று வலியுறுத்தினர். அத் தேசிகர்மீது தாலாட்டு, நெஞ்சுவிடு தூது என்னும் பிரபந்தங்களைப் பாடி, சந்நிதானத்திலே அரங்கேற்றி ஞானோபதேசம் பெற்று அந்த ஞானசாரியரது கட்டளைப் படியே தமது தங்கையாகிய ஞானம்பிகையைச் சாந்தலிங்க சுவாமிகளுக்கு விவாகஞ்செய்து கொடுத்துவிட்டு, தம்மை நெடு நாளாகப் பிரியாது அத்தியந்த அன்புடையாராய் உடன் தொடர்ந்து வந்த அண்ணாமலை ரெட்டியாரைத் துறைமங்கலத்துக்குப் போகும் படி ஆஞ்ஞாபித்து ஞானசாரியரைத் தரிசித்துக் கொண்டு அவ் விடத்திற்றானே யிருந்தார்.

சிலகாலம் சென்றபின் ஞானசாரியரிடத்தே விடைபெற்றுக் காஞ்சிபுரத்தை யடைந்து, சுவாமி தரிசனம் செய்து அங்கிருக்கும் பொழுது நிஜகுணயோகி யென்பவராற் கன்னட பாஷையிற் செய் யப்பட்டிருந்த விவேகசிந்தாமணியின் ஒரு பாகமாகிய வேதாந்தபரிச் சேதத்திற்கு வேதாந்த சூடாமணி எனப் பெயர் தந்து அதனையும் இரேணுகர் என்னும் கணத் தலைவரால் அகத்திய மகாமுனிவருக்கு உபதேசிக்கப்பட்ட சித்தாந்த சிகாமணியையும், பிரபுதேவர் சரித்திர மாகிய பிரபுலிங்கலீலையையும் தமிழிற் பாடியருளி ஞானசாரியரைத் தரிசிக்க வேண்டும் என்னும் பேராசையால் அவர் மீது திருப்பள்ளி யெழுச்சி பிள்ளைத்தமிழ் என்னும் இரண்டு பிரபந்தங்களையும் செய்து கொண்டு, அங்ககன்று இடையிலுள்ள தலங்களைத் தரிசித்துக் கூவ மென்னும் தலத்தையடைந்து, அங்குள்ள வேளாளர்கள் முதலி யோர் வேண்டுகோளின்படி திருக்கூவப்புராணம் பாடி அரங்கேற்றி ஞானசாரியரை யடைந்து தரிசனஞ் செய்து, மேற்சொல்லிய பிர பந்தங்களனைத்தையும் சந்நிதியில் அரங்கேற்றி உடன் வசித்திருந் தனர். அந்நாளிலே ஒருநாள் சாயங்காலம் அநுட்டானம் முடித்துக் கொண்டு ஞானசாரியரிடத்துத் தாம் ஏகாந்தமாயிருந்து ஷடுஸ்தல இலிங்காநுபவ முதலியவற்றை ஆராய்ந்து கொண்டு இன்புறும் பொழுது, எதிர் எழுந்த சந்திரோதயத்தைக் கண்டு,

> கடன்முரச மார்ப்பக் கதிர்க்கயிற்று லேறி
> யடைமதி விண்கழைகின் றாடக்—கொடைமருவும்
> எங்கள் சிவஞான வேந்தல் இறைத்தமணி
> தங்கியவே தாரகைகள் தாம்

என்னும் வெண்பாவை அருளிச் செய்தார்.

பின்னர் ஞானசாரியர் அநுக்கிரகித்தபடியே விருத்தகிரியடைந்து பழமலை நாதரையும் பெரியநாயகி யம்மையாரையும் தரிசித்து வணங்கி, அவ்விடத்திலே தம்பொருட்டு ஒரு திருமடம் அமைத்து எதிர்கொண்டு வணங்கி நிற்கும், சிதம்பரபூபதியைச் சிறப்பித்து,

வெங்கைப் பழமலை யார்மீது கோவை வியந்துரைக்கும்
எங்கட் கினிய சிவஞான தேவ னிசைவுகொடு
திங்கட் பவனி யிருகான் முதகுன்றர் சேர்மறுகின்
மங்குற் சிதம்பர பூபதி நல்கு மிடமிதுவே

என்னும் கட்டளைக்கலித்துறையைப் பாடியருளி அத் திருமடத்து அடைந்து வீற்றிருந்து, பழமலையந்தாதி, பிக்ஷாடன நவமணிமாலை, கோச்சகக் கலிப்பா, பெரியநாயகியம்மை நெடுங்கழிநெடிலடியாசிரிய விருத்தம், பெரியநாயகியம்மை கட்டளைக் கலித்துறை என்னும் பிரபந்தங்களைத் திருவாய் மலர்ந்தருளினர். ஒரு நாள் மணிமுத்த நதியிலே ஸ்நானஞ்செய்து வரும்பொழுது, அதனருகிலிருந்த மாஞ்சோலையின் புறத்து வறிதே விழுந்து கிடந்த மாங்கனியைக் கண்டு, இது சிவலிங்கப் பெருமானுக்கு நைவேத்தியத்திற்கு உபகரணமாகும் என்று கருதி யெடுக்க, அதுகண்ட அச் சோலைக் காவலாளன் மகிமையறியாது மடி பிடித்திழுத்து மனவருத்தம் செய்தனன். சுவாமிகள், அவன் சிவாபராதியா யிருத்தலின் அவனைத் தண்டித்துச் சுத்தனாக்கத் திருவுளங்கொண்டு,

அடுத்துவருந் தொண்டனுக்கா அந்தகனைத் தாளால்
அடர்த்ததுவும் சத்தியமே யானால்—எடுத்ததொரு
மாங்கனிக்கா வென்னை மடிபிடித்த மாபாவி
சாங்கனிக்கா திந்தன்வரத் தான்

என்னும் வெண்பாவைப் பாடிச் சூரியனுதயமானவுடன் உயிர்துறக்கும்படிச் செய்து நற்கதியிலடைவித்தனர்.

இங்ஙனம் இருக்கும் நாளிலே சிவஞான தேசிகர் தமக்கு ஐந்நூறு வயது பூர்த்தியானமையால் உலகின்கண் இருத்தலில் உவர்ப்புத் தோன்றி அப்பொழுது சகல பற்றுக்களையும் ஒழித்து விளங்கும் சிவப்பிரகாச சுவாமிகளுடைய சித்த விரத்தியைத் தாமறிந்திருப்பதால், பரிபக்குவராகிய வேறோர் மாணக்கருக்கு ஆசாரியாபிடேகஞ் செய்து ஞானோபதேசம் புரிந்து அவரைத் தமக்குப் பதிலாக நியமித்துவிட்டு வைகாசி மாதத்தில் பௌர்ணமி திதியோடு

கூடிய விசாக நக்ஷத்திரத்திலே, சிவயோக சமாதியிற்கூடி சித்தியால் திருமேனியை விபூதிமயமாக்கி ஒடுக்கித் தாம் இஷ்டலிங்க பரசிவத்திலே கலந்தருளினர். இதனையறிந்த சிவப்பிரகாசசுவாமிகள் மனம் கலங்கிப் பொம்மபுரத்தை யடைந்து ஆசிரியர் ஒடுங்கிய குகையுட் சென்று அடியற்ற மரம்போல விழுந்து பலமுறை நமஸ்கரித்துத் துதித்து "கருணாநிதியே! இக் கடையேனையும் விரைவிலே திருவடியிற் சேர்த்தருளுக" என்று பிரார்த்தித்துத் தாமியற்றிய கலம்பகத்தையும் சந்நிதியில் அரங்கேற்றிக் குகையுள்ளே ஞானசாரியரைப் பாவனரூபமாக வழிபட்டுக் கொண்டு மூன்றும் பட்டத்து சுவாமிகளோடு தங்கியிருந்தனர். ஒருநாள் தனிமையாய்ச் சமுத்திரதீரத்தையடைந்து அங்குள்ள மணற்பரப்பிலே தாமெழுதிய நன்னெறி வெண்பா நாற்பதையும் எழுதிவரும்படித் தம்பின்னோராகிய கருணைச் சிவப்பிரகாசச் சுவாமிகளுக்குக் கட்டளையிட்டு, ஞானசாரியரிடத்தே விடைபெற்றுக்கொண்டு திருப்பதிகம் பெற்ற திருத்தலங்கள் தோறும் யாத்திரை புரிந்து வந்தனர். அக் காலத்திலே அகராதி செய்த வீரமாமுனிவர் என்பவர் எதிர்ப்பட்டு ஏசுமதமாகிய தங்கொள்கையை நாட்டுதற் பொருட்டுத் தருக்கம்செய்ய உடனே அக் கொள்கையை மறுத்து ஏசுமத நிராகரணம் எனப் பெயரிய ஓர் நூலை யருளிச்செய்து ஒவ்வொரு தலங்களையும் இவ்விரண்டு வெண்பாக்களால் தோத்திரம் செய்து முடித்து நல்லாற்றூரை யடைந்து ஞானசாரியரது திருமடத்தில் வீற்றிருந்தார்.

இவ்விடத்து விடைபெற்றுச் சென்ற கருணைப் பிரகாச சுவாமிகள் இஷ்டலிங்க அகவல் பாடி முடித்து, சீகாளத்திப் புராணத்தைப் பாடத்தொடங்கிச் சீகாளத்திச் சருக்கம் வரையும் தமிழில் மொழிபெயர்த்தருளித் திருவெங்கைமா நகரத்தில் பதினெட்டாம் வயதில் சிவலிங்க வைக்கியமாயினர். அதனையறிந்த சிவப்பிரகாச சுவாமிகள் அவ்விடத்தே சென்று,

முன்னமொரு தமிழ்ப்புலவன் தனையுண்டு கண்டசுவை முதிர்ச்சி யாலே
தன்னியலை முழுதுமுரைத் தலைமயா மூன் னினைக்கவர்ந்து நடங்கா ளத்தி
மன்னவனுண் டானெனது மாதவத்தின் வலிதீர மண்ணின் மீதே
யென்னுடன்வந் தவரித்த இளங்கருணைப் பிரகாசன் என்னுங் கோவே

என்னும் விருத்தத்தைப் பாடி நிற்க, வேலைய சுவாமிகள்,

ஆண்டதனுல் லனையொவ்வாய் வித்தையினில்
தமையனினும் அதிகம் என்றே
பூண்டவுல கதனினுள்ளோர் புகல்வதுகேட்
டிருந்துமென்ன புதுமை தானே
காண்டகுகண் மணியேநல் இளங்கருணைப்
பிரகாசக் காளாய் நீதான்
மாண்டனையென் றறிந்திருந்தும் உயிர்தரித்தேன்
யானுமிகு வன்னெஞ் சேனே

என்னும் விருத்தத்தைப் பாடித் துக்கித்துக்கொண்டு சுவாமிகளைப் பிரியலாற்ருது வருந்தி நின்றனர். அவரை யொருவாறு தேற்றி நிறுத்திவிட்டுத் தாம் நல்லாற்றாரை யடைந்து திருமடத்திலிருந்து கொண்டு சிவநாமமகிமையும், இஷ்டலிங்கப்பெருமாள் மீது அபிஷேக மாலையும், நெடுங்கழிநெடிலும், குறுங்கழிநெடிலும், நிரஞ்சன மாலையும், கைத்தல மாலையும், சீகாளத்திப் புராணத்தில் கண்ணப்பச் சருக்கமும், நக்கீரச் சருக்கமும் செய்தருளி சிவாநுபவச் செல்வராய்ச் சில காலம் வாழ்ந்திருந்து, முப்பத்திரண்டாம் வயதில் கன்னிமதியில் பௌர்ணமித் திதியில் இஷ்டலிங்க பரசிவத்திற் கலந்தருளினர். அப்பொழுது வேலைய சுவாமிகள்,

அல்லிமலர்ப் பண்ணவனு மாராய்ந் தறிகவிதை
சொல்லு மிருவரிடைத் தோன்றியயான்—முல்லை
யரும்பிற் பொலியும் அணிமுறுவல் நல்லாய்
கரும்பிற் கனுநிகர்த்தேன் காண்

என்னும் வெண்பாவைப் பாடி அளவிடப்படாத அருந்துயர்க் கடலின் மூழ்கி ஒருவாறு தெளிந்து சிவப்பிரகாச சுவாமிகளது சமாதி தரிசனம் செய்துகொண்டு, அவ்விடத்தினின்றும்நீங்கி நல்லூர்ப்புராணம், இஷ்டலிங்கக் கைத்தல மாலை, கும்பகோணச் சாரங்கதேவர் சரித்திர மாகிய வீரசிங்காதன புராணம், குகை நமச்சிவாயதேசிகர் சரித்திர மாகிய நமச்சிவாய லீலை, கிருஷ்ண சரித்திரமாகிய பாரிசாத லீலை, மயிலத்திரட்டைமணிமாலை, மயிலத்துலா, என்னும் பிரபந்தங்களைச் செய்தருளி சீகாளத்திப் புராணத்தை முடித்துப் பெருமத்தூர் மடத்தில் எழுபத்திரண்டாம் வயதில் சிவலிங்கவைக்கிய மாயினர்.

---

II

இனி மேற்கூறிய வரலாற்றினுள் கூறப்படாதனவும் மாறுபட்டனவுமான கருத்துக்களை மட்டும், சேயூர்-ப. கந்தசாமித் தம்பிரான் பதிப்பித்த சிவஞானபாலய சுவாமிகள் தாலாட்டு முதலிய நூல்கள் அடங்கிய பதிப்பிலிருந்து எடுத்து எழுதுவேம்.

(1) குமாரசாமி தேசிகர் என்பார் முதலில் சைவராயிருந்து வீரசைவரான வரலாறு அப் பதிப்பில் குறிப்பிடப்படவில்லை. அவரைப் பற்றித் "திருத்தொண்டை மண்டலத்துள் ஸ்ரீ காஞ்சிபுரியில் வசித்திருந்த நிகமாக மோக்த சிவாத்வைத ஸித்தாந்த ப்ரவர்த்தக வீர மாஹேஸ்வரரும்-ஏகவிம்சதி தீக்ஷாஷ்டாவரண பஞ்சாசார சதுஷ்ஷஷ்டி சிலஸம்பந்நரும்-ஸச்சிதாநந்த ஸ்வரூப ஏகலிங்க நிஷ்டாபரரும் ஆகிய குமாரசாமி ஐயர்" என்று குறிப்பிட்டிருக்கிறது. அவர் திருவண்ணுமலைக்குச் சென்றதாகவும் கூறவில்லை.

(2) திருக்காட்டுப்பள்ளி நிகழ்ச்சி கூறப்படவில்லை.

(3) உளுந்தூர்ப்பேட்டை நிகழ்ச்சி யொன்று புதியதாகக் காணப்படுகின்றது. அது வருமாறு:—

"(ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்) சாதாரண மும்மல ஆத்ம கோடிகளை ஜீவாந்தகாலத்தில் வலது செவியில் சிவதாரகத்தை அநுக்கிரகித்து தத்சொரூபத்தில் சேர்க்கும் முக்கிய (விருத்தகாசி) யில் நமது திருமடத்தில் வசித்துக்கொண்டு உளுந்தூர்ப்பேட்டை முதலிய மகமை வரும்படியை யடியார்களுக்கு அமுதிட்டிருக்கும்படி கட்டளை பெற்று, சிவப்பிரகாச சுவாமிகள் விருத்தாசலம் சேர்ந்து (வெங்கைப் பழமலை) என்னும் கலித்துறையருளி, திருமடம் அடைந்திருந்து உளுந்தூர்ப்பேட்டைக்கு அடியாரோடும் சுவாமிகள் செல்ல அக்காலம் துர்ப்பிட்சமாய் இருந்தபடியால் அவ்வூரில் ஜவுளிக்கடை வியாபாரம் சோணசைல செட்டி யென்பவர் (அரும்புக்கோ கொத்துக்கோ) அடியார் வந்ததென்று சொன்னதை யறிந்து (கருந்தலை செந்தலை) யென்னும் கலித்துறை யருளிச் செய்ய, அதனால் சஞ்சலமடைந்து மற்றவர்கள் வணங்கி மகமை வரும்படியை நித்யாநந்தபூசை திரிவித லிங்கார்ப்பித மாகும்படிக் கொடுத்து வந்தார்கள். (பக். 5-6)

இவ் வரலாற்றில் 'வெங்கைப்பழமலை' என்னும் பாடல் வந்தமைக்குரிய காரணம் கூறப்பட்டிலது.

(4) 'கடல்முரசமார்ப்ப' என்ற நிலாவருணனைப்பாடல், 'அடுத்து வரும் தொண்டனுக்கா' என்ற பாடலைப் பாடிய பின்னர்ப் பொம்ம புரம் அடைந்த ஒரு நாள் பாடப்பட்டதென்று கூறப்பட்டுள்ளது.

(5) ஏகமத நிராகரண வரலாறு இல்லை.

(6) ஞானம்பிகையைச் சாந்தலிங்க சுவாமிகளுக்கு மணம் செய்து கொடுத்ததாகக் கூறப்படவில்லை.

(7) கீழ்வரும் வரலாறும் முதல் வரலாற்றில் காணப்படாதது.

கும்பகோண ஸ்தலம் வீரசிங்காதன சாரங்கதேவர் சிஷ்யரும் குடும்ப விர்த்தியுடையவரும் கல்வி சம்பத்துள்ளவரும் ஆகிய, வில்வ நல்லூர் ஸ்தலத்திற்கு அடுத்த தென்மேற்கிலுள்ள நல்லாற்றூர் மடத்தில் வசித்திருந்த, கனகசபை ஐயர் சிதம்பரம் அம்பலத்தாடும் ஐயரோடு சாஸ்திரங்களைக் குறித்துத் தர்க்கம் செய்ய அவர் அருவருப் படைந்து பஞ்சாட்சர மறுதலை உச்சாடனம் செய்தார். அதனால் நல்லாற்றூர் மடத்தினது ஒரு ஸ்தம்பத்தில் தைலம் உற்பத்தியாய் சதா காலம் கசிந்து கொண்டிருந்தது. அத் தைல வாடையினால் கனக சபை ஐயர் குடும்ப ஜனம் லயப்பட்டு வரும்போது முடிவில் பூர்ண கர்ப்பிணி (நித்ய சௌபாக்யவதி) அம்மாள் மாத்திரம் தனித்துத் தப்பி யிருப்பதைத் தெரிந்த கிராமாதிபதிகள் ஸ்ரீமத். சிவஞானபாலய சுவாமிகளது மகிமாதிசயங்களைக் கேள்விப்பட்டு அழைத்துக் கொண்டு வந்து பொம்மபாளையம் ஸ்ரீமத், குருசுவாமிகள் சந்நிதானத்தில் அடைக்கலம் புகுவித்தார்கள். சுவாமிகளது திருவுள மிரங்கித் திரு மடத்திற்கடுத்த ஒரு கிரகத்தில் இருக்கக் கட்டளையிட்டருளிய பின்பு உடனே ஆண் சந்தான உற்பத்தியாகிப் பட்சத்திற்குள் சிவலிங்க தாரண அஸ்தமஸ்தக ஸ்தூல பஞ்சாட்சர உபதேசானுக்கிரகம் செய்த பின்னர் அந்தம்மாள் தன் வம்ச விர்த்தியாயிருக்கும்படி அனுக்ஞை பெற்று லிங்கயிக்கியமானார்கள்.

ஸ்ரீஞானசாரியாரது திருவடிகளே அக்குழந்தைக்குத் தாயாகவும் தமது க்ஷீராணுவேத்யப் பிரசாதமே ஆகாரமாகவும் திருப்தி யடைந்து வளர்ந்துவந்த காரணத்தினால் (அமிர்த பாணி) என்னும் திருநாமம் பெற்றுக் கல்விப் பெருக்கம் அடைந்திருந்தனர்.

அப்போது (ஸ்ரீமத். சிவஞானபாலய சுவாமிகள்) தமது மாணுக்கராகிய (அமிர்தபானி) ஐயருக்கு-சிவப்பிரகாச சுவாமிகள் கனிஷ்டராகிய-கருணைப் பிரகாச சுவாமிகளது புத்ரி (சிவாநந்தம்) என்னும் கன்னிகையைச் சந்நிதானத்தில் (அமிர்தபானத்தினுல் ஆநந்தமடைவது) சகசமானதால் விவாகம் செய்வித்து நல்லாற்றூர் மடமானியமும் (பில்வ வனஸ்தலம்) ஆகிய வில்வநல்லூர் தக்ஷிணக்கோபுரம் சிலாசாதனப்படி கோபுர தரிசனம் (பூர்வபாகம்-உத்தரபாகம் மகத்து வரும்படியை புதுவை மடத்துச்சரபதிக்குக் கொடுத்திருப்பதன்றி) தக்ஷிண பாக பச்சிமபாகம் மகத்து வரும்படியைக்கொண்டு (ஸ்ரீமத். காமீசுரர்) சந்நிதியில் அகண்டதீபம் நடத்திவரும் மகஸ்தல அதிகாரமும் அமிர்தபானி ஐயருக்குக் கொடுத்துக் கட்டளையிட்டருளியது.

(சிவப்பிரகாச சுவாமிகள்) சிவாநந்தக் கன்னிகை பிரிவாற்றுமையின் குறிப்பைத் தெரிந்து நீயும் உனது சந்ததியார் முதலானவர்களும் செய்யும் பக்தி பூர்வ உபசாரங்களை நாம் அங்கிகரித்துத் துணையிருப்போம் என்று திருவாக்கிட்டது.

இந்தப்படி விடைபெற்றுக்கொண்டு அமிர்தபானி ஐயர் சிவாநந்த பாரியாளுடன் நல்லாற்றூர்மடம் சேர்ந்து திருகாச்சிரமதருமம் நடத்தி வந்தனர்.

பின்பு ஸ்ரீமத். சிவஞானபாலய சுவாமிகள் கட்டளையைப் பெற்று சிவப்பிரகாச சுவாமிகள் (திருவக்கரை) ஸ்தலத்திற்கடுத்த உத்தரபாகத்தில் விளங்கும் (ஸ்ரீ மாயூராசல க்ஷேத்திரம்) சென்று தரிசித்து நல்லாற்றூர் சேர்ந்து திருமடத்தில் எழுந்தருளி (சிவநாமமகிமை-அபிஷேக மாலை-நிரஞ்சன மாலை-கைத்தல மாலை-இஷ்டலிங்க நெடுங்கழி நெடில்-குறுங்கழி நெடில்) அருளிச் செய்து வாசம் செய்திருந்தது. (பக். 8-11)

(8) வேலையர் ஓலைப்பாடியில் சமாதியாயினர் என்பது கூறப்பட்டிருக்கின்றது. (முன் வாலாற்றில் பெருமத்தூர் மடத்தில் என்று காணப்பட்டது.)

[தொடரும்]

# நாலடியாராராய்ச்சி

திரு. சத்தியவாகீசுவரையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், திருவநந்தபுரம்.

இந் நூலில் பெரும்பாலும் பொது நீதிகளும் சிறிது ஜைனமதக் கோட்பாடுகளும் சொல்லப்படுகின்றன. நீதிகளிற் பல அக் காலத் திற்கு இன்றியமையாதவை. ஆயினும் இக் காலத்து அவை பழமையை அறிய விரும்புவார்க்குச் சரித்திரமாகப் பயன்படுவனவாம். இந் நூலின் பாக்களைப் பரிமேலழகர் முதலிய உரையாசிரியரெல்லாரும் தம் உரைகட்கு மேற்கோளாகக் காட்டியிருக்கின்றனர். சொற்பொருள் களி னமைப்புக் கடவுள் வாழ்த்துச் செய்யுள் முதல் கடைசிப் பாட்டு வரை ஒத்திருத்தலால், இந்நூல் ஒருவராலேயே இயற்றப்பட்டது என் றெண்ண இடமுண்டு. கடவுள் வாழ்த்தில் "முன்னியவை முடிக வென்று" என்றது நாலடியாரின் முற்றுப்பேறும் நின்றுநிலவுதலும் கருதி இயற்றியவரின் வேண்டுகோளாகும். ஒவ்வொரு அதிகாரத்திலு முள்ள பாக்கள் பத்தும் பொருளில் ஒத்திருக்கவில்லை யெனின்? ஒத் திருக்கவேண்டுமென்று, இயற்றியவரெண்ணமையே அதற்குக் காரண மாம். அதிகாரப் பெயர்கள் "கழகந் தோட்டம்" என்பது போல நின்றன.

கடந்த ஆயிரம் ஆண்டுகட்கு முன் திருவரங்கத்தை யடுத்துள்ள ஒரூரில் வாழ்ந்தவராக அறியப்படுகிற "பெருமுத்தரையர்" என்ற பெருஞ் செல்வரைப் 'பெருவள்ளல்' என்று இந் நூலில் இரண்டு பாக் களால் தெரிவிப்பதால், ஆசிரியர் அவர் காலத்திலிருந்தவரென்று அறிய லாம். ஆசிரியர் ஜைனமதக் கோட்பாடுகளை உடன்பட்டுக் கூறுதலால் அம் மதத்தைச் சார்ந்தவரென்பது ஊகிக்கப்படுகிறது. இவர் பெயர் விளங்கவில்லையாயினும் 'கோதையாறு' ஒழுகுகிற நாஞ்சில் நாட்டில் மலையடிவாரத்தி லமைந்து, சந்தன நீள்சோலையால் நாலுபக்கமும் சூழப்பட்ட ஒரூரில் இருந்த சிற்றரசனொருவனால் ஆதரிக்கப்பட்டு அவனுக்கு மந்திரியாகவும் நண்பராகவுமிருந்து பலநீதிகளை உபதேசித்து

வந்தார்; என்றறியும்படி இந்நூற் பாட்டுக்கள் பல தெரிவிக்கின்றன. இந் நாடு கடற்கரையிலிருப்பதால், இவ்வரசனைக் 'கடற்கரைச்சேர்ப்ப!' என்றும் பல பாக்களில் விளிக்கின்றார்.

> "கோதை யருவிக் குளிர்வரை நன்னாட!
> பேதையோ டியாதும் உரையற்க" (செய்யுள் 71.)

எனவும், "ஓங்கருவி நாட!...இன்பத்தின் பக்கம் இருந்தைக்க "(79) எனவும், "உயர்வரை நன்னாட!...தாம் செய்த அரிய பொறுப்பரென் றன்றே!" (77) எனவும் "அருமெல்லாம் சந்தனநீள் சோலைச் சாரல் மலைநாட" எனவும் வருதல் காண்க. இவர் நாஞ்சில் நாட்டில் வாழ்ந்தவரென்பதற்கு, பாக்களிலுள்ள சொற்கள் பல இந்நாட்டு வழக்காயிருத்தலும் சான்றாகும். அன்றியும் "விண்குத்து நீள்வரை வெற்ப!" என்று இவரது நாட்டிலுள்ள மலை வேய்களுக்குச் சிறந்த தென்று இவரே கூறியிருத்த லாலும், இக் காலத்தும் வாகனத் தண் டாயங்களும், தம்ப விளக்கேணிகளும், பல்லக்குக் கொம்புகளும், பருமை நீளம் உறுதி இவைபற்றி இம்மலையில் தயாரிக்கப்படுதலா லும் அறியலாகும்.

நீதிப்பாக்களாயினும் கவிசாதுர்யத்துடன் விளங்குகிற இந் நூற் செய்யுள்கள், "ஆலும் வேலும் பல்லுக் குறுதி நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" என்றபடி, திருக்குறட்பாக்களுக்குள்ள குணங்க ளெல்லாம் ஒத்திருத்தலோடு அவற்றிற் காணப்படாத விசேடமொன்று முடையனவாய், 'நாலும் இரண்டும்' என முதலில் வைத்து எண்ணப் படுவனவா யிருக்கின்றன. அஃது என்ன? எனின், வருந்தி உய்த் துணர்வார்க்கன்றி, மேலெழுந்த பார்வையால் நோக்குபவர்க்கு உரிய பொருளறிய முடியாமல் அதனை மறைத்து வேறொருபொருளால் அவர் திருப்தியடையும்படி சொல்லமைந்து நிற்பது. இந் நயம் பாக்களிற் பெரும்பாலும் காணப்படுகிறது. அவ்வாறு சொல்லமைதற்கு அவற் றைத் தெரிந்தெடுப்பதில் புலவர் மிக வருந்தியிருப்பரென்று எண்ண இடமிருக்கிறது. பொருளை மறைப்பதற்கு அவர் கண்ட வழிகள் பல. பொருள் மறைந்திருப்பது பற்றி, (335ல்) ஆசிரியர் "நெறி பட்டுக் கற்பவர் கெல்லாம் எளிய நூல்" எனவும், "யார்க்கும் அறிதற் கரியபொருள்" எனவும் கூறுகிறார். (நெறிபட்டு-பயன்பட்டு, "கனம்

பொதிந்த நூல் விரித்துக் காட்டினும்" (341) என்று கூறுகிறார். "கருத்துணர்ந்து கற்று" (211) என்பதால் இயற்றியவர் கருதிய பொருளை உணரவேண்டும், அதன் சொற்பொருளை யறிந்து அதனைப் பிரதிபதத்தால் தெரிவித்தல் போதாது என்கிறார். ஆகவே இந்நூற் செய்யுட்களெல்லாம் நன்கு கற்றவர்க்கும் உரிய பொருள் எளிதில் விளங்குவனவல்ல என்று அறியலாம்.

இனி, அவர் சொல்கிறபடி, பாக்களில் பொருளமைந்திருக்கின் றனவா? என்பதைப் பார்ப்போம்.

**உதாரணம் 1**

கோதை யருவிக் குளிர்வரை நன்னாட
பேதையோ டியாதும் உரையற்க—பேதை
உரைக்கிற் சிதைந் துரைக்கும் ஒல்லும் வகையால்
வழுக்கிக் கழிதலே நன்று. (71)

இதில் பேதை என்று இவனை நன்னுடன் அறிவனா? அறியானா? அறிவானெனின் இவ் வுபதேசம் அவனுக்கு வேண்டா; அறியானெனின் இவன்யார்? எனின்? இவன்வேற்றரசனிடமிருந்து செய்திகொண்டுவந்த ஒருபேதை; இவனது முதற்பேச்சினால் இவன் பேதை என்பது புலவரால் அறியப்பட்டது; அரசன் இவனோடு பேச முயல்கையில், உடனிருந்த மந்திரியாகிய புலவர் இவ்வாறு அவனுக்குப் புத்திமதி கூறினார்; வருந்தி உய்த்துணர்வார்க்குப் புலப்படுதற்குரிய இப் பொருளை மறைத்து, மேலெழுந்த பார்வைக்குப் போலிப் பொருள் தோன்றச் செய்து அதனால் அவர் திருப்தியடையச் செய்தார்.

இதன் பொருள்:—கோதையாற்றின் அருவி நீரால் குளிர்ந்த மலையையுடைய நல்ல நாட்டிற்கு அரசே! செய்தி கொண்டுவந்த இப் பேதையினிடம் ஒரு வார்த்தையும் சொல்ல வேண்டா; ஏனென்றால்? பதில் சொல்லப் பேதை வாய் திறந்தால் காரியங்கெடப் பேசுவான். அதனால் எந்த வகையாலாயினும் அவனிடம் நாம் பேசுவதிலிருந்து அவனை நழுவுவித்து நீங்குவதே நமக்கு நல்லது என்பதாம்.

சிதைந்து - சிதைய. வழுக்கி - வழுக்குவித்து. ஒல்லும் வகை - நான்கு உபாயங்களில் ஏற்ற வகையால்; இங்கு வேண்டுவது சாமமும் தானமுமாம்.

**உதாரணம் 2.**

இன்பம் பயந்தாங் கிழிவு தலைவரினும்
இன்பத்தின் பக்கம் இருந்தைக்க—இன்பம்
ஒழியாமை கண்டாலும் ஒங்கருவி நாட!
பழியாகா வாறே தலை. (79)

இதன் பொருள்:—விழுகின்ற வேகத்தால் அருவிநீர் பொங்குகிற மலைநாடுடையவனே! மனமகிழ்ச்சி தந்த, அல்லது ஆத்ம திருப்தியை உண்டாக்கிய ஒரு காரியம், அதனோடு சம்பந்தப்பட்டவர் நோவுறும் படி யிருந்து பழிக்கப்படுவதாயிருந்தால், பழியைப் பொருட்படுத்தா மல் மகிழ்ச்சி தருகிற பட்சத்தைமதித்து அநீதிகளைச் செய்துவருகிற பெரும்பாலோர் போல நீயும் செய்கிறவனுயிருக்கிறாய்; ஆனால் கணிக மான அந்த மகிழ்ச்சி அல்லது ஆத்மதிருப்தி விட்டு நீங்காமல் அச் செய்கையில் எப்பொழுதும் இருப்பதாக (அறிமுடியாது) அறிந்தா லும், பழிபாவங்கட்கு இடமாகாத பயனுடைய காரியங்களையே செய்ய நீ விரும்பவேண்டும்; இதனையறிந்து ஒழுகுவாயாக; என்பதாம். இன்பம் என்பது புலன்களை நுகர்வதிலுண்டாகும் மகிழ்ச்சியையன்று. விரும்பியது கிட்டுவதிலுண்டாகும் மகிழ்ச்சியை. அது மனதிடை நிகழ்வதோர் கோட்பாடாகலின் கணிகமாயிற்று. கணிகம் - கணப் பொழுதிருப்பது. இழிவு - இழிக்கப்படுவதை யுணர்த்திற்று. இருந் தைக்க என்பதில் அகரம் சாரியை. இருந்தைக்குக் கண்டாலும் என்ற முடிவு, "நன்னெறி சேர நமக்கு" (55) என்பது நாம் நன்னெறி சேர என்ற பொருளில் நிற்பதுபோல, இருந்தாயாகிய நீ கண்டாலும் என, வினைமுதற்பொருளில்நின்றது. (ஆறு-பயன், பின்னதாகலின்) ஆத்ம திருப்திக்குக் காரணமான விரும்பியது பெறுதலும், வெறுத்தது நீங்கலும் உண்டாகுமிடங்களிலெல்லாம், சம்பந்தப்பட்டவரின் மன வேதனையைப் பொருட்படுத்தாமல் செயல்புரிவது நித்யபரிசயமாக இருப்பதைப் பலதரப்பட்ட மனிதரிடத்திலும் என்றும் காணலாம்.

**உதாரணம் 3.**

பெரியார் பெருநட்புக் கோடல்தாம் செய்த
அரிய பொறுப்பவென் றன்றே!—அரியரோ:
ஒல்லென் அருவி உயர்வரை நன்னாட!
நல்லசெய் வார்க்குத் தமர்

இதில் பெரியார் என்றது சௌர்யம், செல்வம், செல்வாக்கு முதலிய வற்றுற் பெரியராய அரசரையே; நல்லொழுக்கத்தாற் சிறந்த சான்ருேரையும் துறந்தாரையும் அன்று; அவர் உபதேசிப்பவராதலன்றி உபதேசிக்கப்படுபவரல்லராகையால். இதை உய்த்துணருமாறு பொதிந்து பாடியிருக்கிருர். மேலெழுந்த பார்வைக்குத் தோன்றுவது வேறு.

இதன் பொருள்:—ஒல்லென்னும் ஓசையுண்டாக விழுகிற அருவிகள் விழுந்த வேகத்தால் நீருயர்கிற மலையால் நன்மை பெற்ற நாட்டிற்குத் தலைவ! உன்போன்ற பெரியாரிடத்தில் என்போன்ற அறிஞர் பெருநட்புக் கொள்வதற்குக் காரணம் தாம் செய்த சிறு பிழைகளுக்குச் சினங்கொள்ளார். பொறுப்பர் என்றல்லவா? அதனுல், பிழை பொறுத்தல் போன்ற நல்லனசெய்வார்க்குத் தம்மவராய் நின்று உதவுவார் உலகில் அரியராவரா? ஆகார். வேண்டுமளவு கிட்டுவர்; என்று அரசனை நோக்கி அவனிடம் மந்திரியாயிருந்த இப் புலவர் ஒரு சமயம் கூறியது இது. பெருநட்புக் கொள்ளுதலாவது:-கொள்ளப்பட்டாரைச் சரணமாக அடைதல். அரிய - சிறு பிழைகள்; அவை பெரியார் ருவக்காதன சொல்லலும் செய்தலும்.

உதாரணம் 4

தளிர்மேலே நிற்பினும் தட்டாமற் செல்லா
உளிநீரார் மாதோ கயவர்—அளிநீரார்க்கு
என்னுனும் செய்யார் எனைத்தானும் செய்பவே
இன்னுங்கு செய்வார் பெறின். (355)

இதில் உய்த்துணர்வார்க்கன்றித் தாங்கருதிய பொருள் மேலெழுந்த பார்வையாளர்க்குத் தோன்ருதபடி மறைத்திருக்கிருர்.

இதன் பொருள்:—கீழ்மக்கள் கல்மேலன்றி இறங்க எளிதில் இடந்தரும் தளிர்மேல் நிற்கவைத்தாலும், தலையிலே ஒரு கொட்டுக் கொடாமல் தானுக இறங்கமாட்டாத உளி போன்றவர். எப்படியெனின்? வண்டுகள்போல் எங்கும் திரிந்து கொடுப்போரை நோவுறுத்தாமல் தந்ததைப் பெற்றுச் செல்லும் இரவலர்க்குக் குறுநொய் யாயினும்

தாமாகக் கொடார். அச்சமுறுத்தலாகிய இன்னல் செய்வார்க்கு அவ ரது பாக்கியத்தால் இக் கயவர் கிட்டுவாராயின், அவர் விரும்புகிற பொருளளவு பெரிதாயினும் அதனை அவர்க்கஞ்சிக் கொடுப்பர் என்ப தாம்.

அளிநீரார் - வண்டின் தன்மையை யுடையவர். தன்மையாவது- இரைக்கு எங்கும் திரிதலும், பூக்கெடுறாமல் தேனெடுத்தலும். பெறின் என்றதனுல் பாக்கியத்தால் என்றும். அளிநீரார் பெரியாராகார், பெரிய சென்றறிந்தக்கால் அவர்க்கஞ்சிக் கயவர் கொடுப்பர். அறியாத நிலையில் அவரும் சிறியரேயாவர். கயவர் உளிபோன்றவ ராகையால், இளக இடந்தரும் செல்வத்தின்மேல் நின்றுலும் ஏழைகளைக் கண்டு மனம் இளகார் என்றூர். மாதோ - அசை. இன்னுங்கு செய்வார் - குறளிவை ஏவித் தீயிடுவிக்கும் இராப்பாடி, 'சபித்துக் கேடுறவிப்பர்' என்று அஞ்சுவிக்கும் சித்தசன், குடுகுடுப்பை, சிறு தெய்வங்களை முன்னிட்டு அவரால் இது வந்ததென்று அச்சமுறுத்தும் மாந்திரிகர் போல்பவர் பலர். இக்காலத்திலும் இவரைப் பற்றிய அச்சத்திற்குக் குறைவில்லை.

(தொடரும்)

---

## 1954-ஆம் டிசம்பர்-மீ 6 உ (ஜய-ஆம் கார்த்திகை-மீ 21 உ) மதுரைத்தமிழ்ச்சங்கக்கட்டிடத்திற் கூடிய மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப் பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1 மகா-ா-ா-ஸ்ரீ SIR. P. T. இராசன் அவர்கள்—உப-அக்கிராசனாதிபதி.
2 „ P. ரெங்கசாமி நாயுடு அவர்கள், B.A., B.L., Advocate.
3 „ S. பார்த்தசாரதி நாயுடு அவர்கள், B.A., B.L., „
4 „ V. ஷண்முகசுந்தரம் அவர்கள், M.A. B.L., „
கௌரவ காரியதரிசி.

இவர்கள் வந்திருந்தார்கள்:

### தீர்மானங்கள்.

1 1953-ஆம்-ஆம் நவம்பர்மீ முதல் 1954-ஆம்ஆம் அக்டோபர்-மீ முடிய மாதாந்தக் கணக்குகளும் வருடாந்தக் கணக்குகளும் அங்கீகரிக்கலாயின.

2 1954-1955-ஆம் வருஷத்திய வரவு செலவுத் திட்டம் (Budget) அங்கீகரிக்கலாயிற்று.

3 மகா-ா-ா-ஸ்ரீ L. அழகியசுந்தரம் செட்டியாரவர்களை ஜீவிய அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

4 ஆங்கிலத் தமிழ்ப் பரீக்ஷைக்குத் திருமங்கலத்தையும், டால்மியாபுரத்தையும் பரீக்ஷை நடத்தப்படுமிடங்களாக (centres) அங்கீகரிக்கப்பட்டது.

5 மதுரை டிஸ்டிரிக்ட் கோவாபெரேட்டிவ் பாங்கில் ரூ 1050, 1001 ஐ முறையே 30-7-54, 18-9-54 முதல் 3 வருடங்களுக்கு (Fixed Deposit) ல் வைக்கப்பட்டிருப்பதை அங்கீகரிக்கலாயிற்று.

6 1954-ம் ஆம்த்தில் நடந்த ஆங்கிலத் தமிழ்ப்பரீக்ஷை (S. S. L. C.) பரீக்ஷகர்களுக்குதவிய ஊதியங்களை அங்கீகரிக்கலாயிற்று.

7 1954-ம் வருத்தில் நடந்த சரஸ்வதி பூஜை செலவு சாங்கிஷன் செய்யப்பட்டது.

8 மகா-ா-ா-ஸ்ரீ R. சேஷய்யங்காரவர்களை (Advocate) சங்கத்து எரவு செலவு கணக்குகளை இன்னும் ஒருவருட காலம் வரை பரிசீலனைசெய்ய ஆடிட்டராக நியமிக்கப்பட்டிருக்கிறது.

9 ஸ்வாமி விபுலானந்தாவின் கட்டுரைகளைத் தொகுத்து ஒரு தொகுதியாகச் சேர்த்து (செந்தமிழ்ப் பகுதிகளிலிருந்து தொகுக்கப்பட்டன வென்ற குறிப்புடன்) புத்தகரூபமாக அச்சிட்டு வெளியிட, இலங்கை களு வாஞ்சிகுடி, குருமன்வேலியிலிருக்கும் அருள்-செல்வநாயகத்துக்கு அனுமதி கொடுக்கலாயிற்று.

10 1955-ஆம் வருஷ ஐனுன்மீ வரை மகா-ா-ா-ஸ்ரீ T. K. இராமானு ஜையங்காரவர்களுக்கு லீவ் (ரஜா) கொடுக்கப்பட்டிருக்கிறது. (மற்றவை பின்னால் ஆலோசிக்கப்படும்)

11 1953-1954 ஆம் வருடங்களில் தேறிய பரிசு மாணவர்களுக்குப் பரிசுத் தொகைகளைச் சங்கத்துப் பொன்விழாக் கொண்டாட்டத்தில் கொடுக் கப் படுமென்று தீர்மானிக்கலாயிற்று.

12 சங்க வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் இத்துடன் இணைக்கப் பட்டிருக்கும் 11-10-54ல் நியமித்த குழுக்களை அங்கீகரிக்கலாயிற்று.

13 மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பொன் விழாக் கொண்டாடுவதுபற்றி 25-11-54 ல் தற்காலிகமாகத் தீர்மானித்ததை ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

14 மதுரை இந்தியன் பாங்கில் வைக்கப்பட்டுள்ள தொகைகளை பரி பக்குவமடைந்த பிறகு மதுரை ஜில்லா கோவாபெரேட்டிவ் பாங்கில் (Fixed Deposit) ல் வைக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

பி. டி. இராசன்,

உப தலைவர்.

## 12-வது தீர்மானத்தின் இணைப்பு:—

தீர்மானம் 2:—செந்தமிழ்ப் பத்திரிகையை இன்னும் சிறந்த முறையில் நடத்துவதற்கு, கீழ்க்கண்டவர்களைப் பதிப்பு ஆசிரியர் குழுவாக அமைக்கப் பட்டது.

I. சைவசித்தாந்தப் பேராசிரியர்
திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்.
(பதிப்பாசிரியர் குழுத்தலைவர்)
தமிழ் விரிவுரையாளர், தியாகராசர் கல்லூரி-மதுரை.

2. திரு. ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்.
ஓய்வுபெற்ற தமிழ்ப்பேராசிரியர் அமெரிக்கன் கல்லூரி-மதுரை.

3. டாக்டர். மா. இராசமாணிக்கனார் அவர்கள்.
M. A. L. T. M. O. L. Ph. D.
தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி-மதுரை.

4. திரு. நா. அப்பனையங்கார் அவர்கள்.
தலைமையாசிரியர், தமிழ்ச் சங்கக் கல்லூரி-மதுரை.

5. ஜனாப் முகம்மது சுல்தான் அவர்கள், M. A. B. L.
வழக்குரைஞர்-மதுரை.

6. திரு. பி. ஜோதிமுத்து அவர்கள், M. A., B. D.
தமிழ்ப் பேராசிரியர், அமெரிக்கன் கல்லூரி-மதுரை.

7. திரு. வி. சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்
அரசாங்க வழக்குரைஞர்-மதுரை.

8. திரு. கி. பழநியப்பன் அவர்கள்.
தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்-மதுரை.

தீர்மானம் 3:—சங்க உறுப்பினர்களையும் "செந்தமிழ்"ப் பத்திரிகையின் சந்தாதார்களையும் அதிகரிப்பதற்காக வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

தீர்மானம் 4:—பாண்டியன் நூல்நிலையத்தையும் சங்கவெளியீடுகளையும் கவனித்து அபிவிருத்தி செய்வதற்காகக் கீழ்க்கண்ட குழு அமைக்கப்பெற்றது. 1. திரு. ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை (2) திரு. நா. பாலுசாமி, M. A. விரிவுரையாளர், தியாகராசர் கல்லூரி, மதுரை. (3) வித்துவான், எஸ். ஆழ்வாரய்யங்கார், செயின்ட் ஜோசப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மதுரை. (4) அ. முத்துசாமிப்புலவர், தமிழாசிரியர், செயின்ட் மேரீஸ் உயர்நிலைப்பள்ளி, மதுரை. (5) திருமலை முத்துச்சாமி, B. A., L. T. Dip-Lib. நூல் நிலையப் பாதுகாப்பாளர், தியாகராசர் கல்லூரி, மதுரை. (6) ஆர். கிருஷ்ணமூர்த்தி M. A. தமிழ்த் துறைத்தலைவர், மதுரைக் கல்லூரி, மதுரை. (7) திரு. நா. அப்பனையங்கார். (8) திரு. அ. கி. பரந்தாமனர்., (9) திரு. வி. சண்முகசுந்தரம். (10) திரு. கே. பழநியப்பன்.

தீர்மானம் 5.— பொதுமக்களுடன் தொடர்புகொள்ளும் முறையில் சங்கத்தில் அடிக்கடி சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்வதற்காகக் கீழ்க்கண்ட குழு அமைக்கப்பட்டது. 1. திரு. அ. சிதம்பர முதலியார், M. L. C. நகரவைத் தலைவர். (2) திரு. ஆ. கார்மேகக் கோனர். (5) டாக்டர். மா. இராசமாணிக்கனர். (4) திரு. ஒளவை, துரைசாமி பிள்ளை. (5) திரு. வி. சண்முகசுந்தரம். (6) திரு. கே. பழநியப்பன்.

தீர்மானம் 6:—அச்சுக்கூடத்தை ஊதியம் தரும் வகையில் நல்ல முறையில் நடத்துவதற்கான வழிமுறைகளை வகுக்கக் கீழ்க்கண்ட குழு அமைக்கப் பெற்றது. (1) திரு. வி. சண்முகசுந்தரம். (2) திரு. கே. பழநியப்பன். (3) திரு. டி. ஏ. வி. நாதன், B. A., B. L. உதவி ஆசிரியர், தமிழ் நாடு. மதுரை. (4) திரு. ஆழ்வாரய்யங்கார். (5) திரு. அ. கி. பரந்தாமனர்.

தீர்மானம் 7:—பிரஞ்சு அக்காடமி (French Academy) முறையில் தமிழ் அக்காடமி அமைப்பதற்கான சட்டதிட்டங்கள் வகுக்கக் கீழ்க்கண்ட குழு அமைக்கப்பட்டது. (1) திரு. M. இரத்தினசாமி, B A. (Bar-at-Law) ஆசிரியர், தமிழ் நாடு, மதுரை. (2) திரு. எஸ். ஜே. சவுரிராயன், M. A., முதல்வர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை. (3) திரு. எ. பி. முகம்மது சுல்தான். (4) திரு. பி. ரங்கசாமி நாயுடு. B.A., B.L., Advocate, மதுரை. (5) திரு. வி. சண்முகசுந்தரம்.

தீர்மானம் 8:—தமிழ்ச் சங்கக் கட்டிட சம்பந்தமான வேலைகளைக் கவனிக்கக் கீழ்க்கண்ட குழு அமைக்கப்பட்டது. (1) திரு. வி. சண்முகசுந்தரம். (2) கே. பழநியப்பன்.

# மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன்விழா

## தமிழர்களுக்கு வேண்டுகோள்.

பாண்டிய மன்னர்கள் மதுரையைத் தலைநகராகக் கொண்ட நாள்முதல் மதுரைமா நகரில் தமிழ்ச் சங்கத்தை நிறுவித் தமிழை வளம்பெற வளர்த்தனர். காலடைவில் ஆட்சி மாறுபாட்டால் சங்கம் மறைந்தது. அந் நிலையில், ஐம்பது ஆண்டுகட்கு முன் இராமநாதபுர அரசர் மரபைச் சேர்ந்த பாண்டித்துரைச் சாமித் தேவர் அரும்பாடு பட்டுப் பாண்டியர் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த அதே மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கத்தை நிறுவினார்கள். அவர்களது பெருமுயற்சியைப் பாராட்டி இராமநாதபுர மன்னரும், புதுக்கோட்டை அரசரும், சிவகங்கை மன்னரும், பல்வேறு குறுநிலமன்னரும், தமிழ்ச்செல்வரும் சங்கவளர்ச்சிக்குத் தம்மால் இயன்ற அளவு உதவிசெய்தனர். அவ்வுதவியின் பயனாக, (1) பாண்டியன் நூல்நிலையம் (2) அச்சகம் (3) 'செந்தமிழ்' என்னும் திங்கள் தாள் வெளியீடு (4) தமிழ் வகுப்புக்கள் என்பவை தோற்ற மெடுத்து வளர்ச்சி பெறலாயின.

சங்கத்தைத் தோற்றுவித்த பாண்டித்துரை அவர்களின் உயர்ந்த எண்ணம் என்றும் நாட்டில் நிலைபெற்று நற்பலன் அளிக்க வேண்டும் என்னும் கருத்தால், சங்க வேலைகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் தரவேண்டுமென்று தமிழ்ச் சங்கச் செயற்குழு விரும்புகிறது.

பிரான்சு நாட்டிலுள்ள அறிஞர் குழுவைப் போல (French Academy), தமிழ்ச் சமுதாய வாழ்வினைச் செப்பம் செய்யவும், தமிழ் மொழியை வளம்பெறச் செய்யவும் இத் தமிழ்ச் சங்கம் வலிமை பெறுதல் வேண்டும். இந் நாட்டிலுள்ள ஒவ்வொரு தமிழ் மகனும் இச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்; இச் சங்கத்திற்கு ஆதரவு நல்குதல் வேண்டும். சுருக்கக் கூறின்,

இச்சங்கத்தின் வளர்ச்சி ஒவ்வொரு தமிழனது வளர்ச்சியிலும் முதலிடம் பெறுதல் வேண்டும் என்பதே சங்கச் செயற் குழுவின் பெரு விருப்பமாகும்.

இவ் விருப்பம் நடைமுறையில் நிறைவேறுதல் வேண்டும் என்னும் நோக்கத்தால்தான், ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெற்ற தமிழ்ச்சங்கம பொன்விழா ஒன்றை மதுரைமா நகரில் ஏழு நாட்கள் கொண்டாட வேண்டும் என்று செயற்குழு உறுதி கொண்டுள்ளது. வடவேங்கட முதல் தென்குமரி ஈறுகவுள்ள தமிழர் அனைவரும், தமிழகத்திற்கு வெளியே பல நாடுகளிலும் பரவி வாழ்கின்ற தமிழரும் இப் பொன் விழாவில் பங்கு கொள்ளு தல் வேண்டும் என்பதும் செயற் குழுவின் விருப்பம். இயல், இசை, நாடகம் என்னும் தமிழின் முப்பிரிவுகளையும் தமிழ் மக்களுக்கு நன்கு உணர்த்தல் வேண்டும் என்னும் கருத்தோடு, ஏழு நாட்களில் ஒவ்வொரு நாளிலும் முத்தமிழ் பற்றிய நிகழ்ச்சிகள் நடைபெறுதல் வேண்டும் என்பது செயற்குழுவின் ஆர்வம். காலை யில் முத்தமிழ் பற்றிய சொற்பொழிவுகள் மூதறிஞரைக் கொண்டு நடத்தவும், மாலையில் புகழ்பெற்ற இசைவாணர்களைக் கொண்டு இசையரங்குகளை நிகழ்த்தவும், இரவில் சிறந்த நாடகப் புலவர்களைக் கொண்டு நாடகங்களை நடிக்கவும் விரும்புகிறோம். பண்டைக்கால முதல் இந்நாள் வரை வெளியாகியுள்ள பலவகைத் தமிழ் நூல்களை யும், பனையோலைச் சுவடிகளையும், தமிழ் நாட்டில் தோன்றி வளரும் ஓவிய, சிற்பக் கலைப்பொருள்களையும், கைத்தொழிற் பொருள்களை யும், பிறவற்றையும் பொருட் காட்சி என்னும் பெயரில் அமைக்கவும் விரும்புகிறோம். முத்தமிழ் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கொண்ட பொன் விழா மலர் ஒன்று வெளியிடவும் விரும்புகிறோம்.

தமிழ்நாடு முழுவதிலுமுள்ள தமிழர் அனைவரும் கட்சி, சாதி, மத வேறுபாடின்றி ஒன்றுசேர்ந்து இப் பொன் விழாவை நடத்து தல் வேண்டும். ஆதலால், எல்லா மாவட்டங்களிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் தக்க தமிழன்பர்களைக் கொண்ட வரவேற்புக் குழு ஒன்று அமைத்து, இப் பொன் விழாவைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்பது எங்கள் பெரு விருப்பம். தமிழ் வளர்ச்சியில்

ஊக்கமும் உழைப்பும் காட்டும் உண்மைத் தமிழர்கள் எங்கள் விருப்பத்தை நிறைவேற்றவும், தங்கள் தாய்மொழியின்பாலுள்ள அன்பினை வெளிக்காட்டவும் தாமாகவே முன்வருவர் என்பது எங்கள் நம்பிக்கை. இவ்வாறே, தமிழ்க்கலைவாணர்களும் நாடகப் புலவர்களும் தாமாகவே முன்வந்து தங்கள் தாய்மொழிக்குத் தொண்டுசெய்ய மனமுவந்து கூடுவார்கள் என்று திண்ணமாக நம்புகின்றோம். இப்படி, தாமாகத் தொண்டுசெய்ய மனமுவந்து முன்வரும் கலைஞர்களுக்குப் போக்குவரவுச் செலவும், மதுரையில் தங்கியிருக்க வசதியும் செய்து கொடுக்கப்படும்.

இப் பொன்விழா நிகழ்ச்சிகளில் தமிழ்மக்கள் காட்டும் ஊக்கமே தமிழ்ச்சங்கத்தின் எதிர்கால ஆக்கத்திற்குச் சிறந்த அடிப்படையாக அமையும் என்பதை ஒவ்வொரு தமிழரும் உளங்கொள்ளுதல் வேண்டுகிறோம். தமிழ்ச்சமுதாயத்தின் ஒற்றுமையும் நல்வாழ்வும் தமிழர் இப் பொன்விழாவைக் கொண்டாடுவதிலிருந்தே பிறர் அறிந்துகொள்ளுவதாக இருத்தல்வேண்டும் என்பது எங்கள் பேரவா.

பழமையும் பெருமையும் வாய்ந்த தமிழ்மரபில் வந்த தமிழர் இப்பொன்விழாவைத் தம் விழாவாகக்கருதி, நன்முறையில் நடத்தி வெற்றிகாண வேண்டுகிறோம்.

மேலும் செய்திகள் அறிய விரும்புவோரும், பொன்விழாக் கொண்டாட்டத்தைப்பற்றிய தம் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புவோரும் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதும்படி வேண்டுகின்றோம்.

செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
தமிழ்ச்சங்கவீதி - மதுரை.

பி. டி. இராசன்,
உப-தலைவர்.

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம் ... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) ... ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... ... | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |

---

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | கனாநூல் (5) இனியநாற்பது (உரை) ... ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... .. ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் ... ... ... | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் ... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பகமூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா ... ... ... | 0 | 8 | 0 |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை ... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... ... | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் | ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... | ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... | ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... | ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... | ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... | ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... | ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) | ... | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... | ... | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... | ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) ... ... | ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு... ... | ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் | ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... | ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... | ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... | ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... | ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... | ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... | ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... | ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை | ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... | ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... | ... | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தாஞ்ஜலி ... ... | ... | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் | ... | 0 | 8 | 0 |
| 70. | திருச் சிறுபுலியூருலா ... ... | ... | 0 | 12 | 0 |
| 71. | துணைத்தலைவர் நினைவுமலர் ... ... | ... | 0 | 10 | 0 |

குறிப்பு:-1. கைவசம் இல்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

2. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4-8-0. இதுவரை 50 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.